

# சிந்துவெளி எழுத்து வடிவங்கள்

டாக்டர் க.த.திருநாவுக்கரசு







# சிந்துவெளி எழுத்து வடிவங்கள்

டாக்டர்
க. த. திருநாவுக்கரசு
M.A. (தமிழ்); M.A. (வரலாறு);
M.Litt; Dip. in Lings.
இணைப்பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-20.

மணிவாசகம்
கோட்டூர்த் தோட்டம்,
சென்னை-85.

மணியக வெளியீடு : 8
வகை : வரலாறு
முதற்பதிப்பு : ஏப்ரல் 1982
© உரிமை : திருமதி தி. கஸ்தூரி
தாள் : 11.6. இ.கி. வெள்ளை
நூலின் அளவு : 18.5×12.5 செ.மீ. (கிரவுன்)

விலை ரூ. 7/-

கிடைக்கும் இடம் :

1. மணியகம்
3, இரண்டாவது நெடுஞ்சாலை,
கோட்டூர்த் தோட்டம், சென்னை-85.

2. பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை, சென்னை-1

3. மீனாட்சி புத்தக நிலையம்
222 டாக்டர் நடேசன் சாலை, சென்னை-5,

அச்சிட்டோர் : எஸ். தன்யகுமார் பிரஸ், சென்னை-17,

# ஆசிரியரின் பிற வரலாற்று நூல்கள்

1. சிந்துவெளி தரும் ஒளி
(வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1959)

2. வாழ்வும் வரலாறும்
(மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960)

3. தமிழர் நாகரிக வரலாறு—விடிவெள்ளி
(தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962)

4. முதலாம் இராசராசன்
(தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை 1975)

5. வரலாற்று வஞ்சி
(தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னை, 1976)

6. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு
(சேகர் பதிப்பகம், சென்னை, 1979)

7. பர்மாவில் தமிழ்ப் பண்பாடு
(வானதி பதிப்பகம், சென்னை, 1982)

8. தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாடு
(மணியகம் சென்னை, 1982)

நூலின் பகுதிகள் :

1. இனமரபு வரலாறு
'தமிழ்நாட்டு வரலாறு—தொல்பழங்காலம்'

2. குறுநில மன்னர் வரலாறு
'தமிழ்நாட்டு வரலாறு—சங்ககாலம் அரசியல்'

3. தமிழ நாகரிகமும் பண்பாடும்
'தமிழ்நாட்டு வரலாறு—சங்ககாலம் : வாழ்வியல்'

( தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு வெளியீடு )

# பதிப்புரை

'சிந்துவெளி எழுத்து வடிவங்கள்' எனும் இந்நூலை வெளியிடும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தமைக்கு மகிழ்கிறோம். இத்தகைய நூல் ஒன்று, இன்று வரையில் நம் தமிழ்மொழியில் வெளிவரவில்லை.

தமிழ் நாட்டின் பெருமைக்குரிய பல்கலைக் கழகங்களும் ஆராய்ச்சி நிறுவனங்களும் எப்பொழுதோ செய்து இருக்க வேண்டிய பணியை, துணிச்சலோடு செய்வதற்கு மணியகம் துணிந்துள்ளதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்,

கடந்த முப்பது ஆண்டுகளாக அறிஞர் க. த. திருநாவுக்கரசு சிந்துவெளிப் பண்பாட்டு ஆய்வியலில் ஈடுபட்டுள்ளார்; அரசினுடைய ஆதரவையோ, நிறுவனங்களின் உதவியையோ பெற இயலாத நிலையில், தனிமனிதராகத் தனிப்பட்ட நிலையில், தமிழருடைய பண்பாட்டிற்குப் புத்தொளி சேர்க்கும் பணியில் அவர் அயராது உழைத்து வருகிறார்.

அவருடைய உழைப்பின் பயனாக இருபது ஆண்டுகளுக்கு முன்னர், 'சிந்துவெளி தரும் ஒளி' எனும் நூல், சிந்துவெளிப் பண்பாட்டிற்கு ஓர் அறிமுகம் எனும் வகையில் வெளியிடப்பட்டது. இப்பொழுது சிந்துவெளி எழுத்துகளைப் பற்றிய ஆராய்ச்சியின் நோக்கையும் போக்கையும் விளக்கும் இந்நூல் வெளிவருகிறது.

அடுத்து, இந்நூலாசிரியரின் ஆராய்ச்சி முடிவுகளை வெளிப்படுத்தும் "சிந்துவெளி வரிவடிவங்கள் - புதிய கண்ணோட்டம்" எனும் நூலை வெளியிடத் துணிந்துள்ளோம்.

'சிந்துவெளி எழுத்து வடிவங்கள்' எனும் இந்நூலினை ஏராளமான விளக்கப் படங்களோடு விரிவாக வெளியிட வேண்டும் என்பது ஆசிரியரின் விருப்பம். பல்வேறு காரணங்களால், இப்பொழுது அவ்வாறு வெளியிட இயலவில்லை'

இந்நூல் வடிவில் சிறியது; கருத்தில் பெரியது; ஆய்வில் ஆழமானது. இந்தப் 'புதிய முயற்சிக்கு' ஆதரவு அளிக்குமாறு தமிழ் அன்பர்களை வேண்டுகின்றோம்.

பதிப்பகத்தார்

# முன்னுரை

பள்ளியில் படித்த காலத்தில், சிந்துவெளி நாகரி கத்தைப் பற்றி நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் வாய்ந்த ஆசிரியர்கள் எங்களுக்குக் கதைகதையாகச் சொன்னார்கள். சிறுவர்களாகிய நாங்கள், அவற்றைக் கேட்டு வியப்பு அடைந்தோம். நம் கூவம் ஆற்றுக்குக் பக்கத்தில் (சென்னை யில் ஓடும் கூவம் ஆற்றங்கரையில் எங்கள் சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளி இருந்து வருகிறது) அத் தகைய புதையுண்ட நகரம் ஒன்று இருக்கும் என்று, இரண்டாவது உலகப்போரின் போது தற்காப்புக்காக நிலத்திற்கு அடியில் அமைக்கப்பட்டு இருந்த சுரங்க அறைகளுக்குக் கீழே தோண்டிப்பார்த்து மாணவர்களா கிய நாங்கள் மகிழ்ந்து விளையாடினோம். அந்த நாள் முதல், சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றிய எண்ணம் என் உள்ளத்தில் நிழலாடிக் கொண்டு இருக்கிறது. டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுடைய எழுத்தும் பேச்சும் சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்த ஹீராசுப் பாதிரியாரைப் பற்றிய எண்ணங்களை என் உள்ளத்தில் விதைத்தன.

சென்னை விவேகாநந்தர் கல்லூரியில் இடைநிலை வகுப் பில் படித்த நாள் முதல் (1949-51), சிந்துவெளிப் பண்பாட்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டு, இடையறாது நான் உழைத்து வருகிறேன். இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுமாறு என்னைத் தூண்டியவர், என் வணக்கத்திற்குரிய பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆவார். பச்சை யப்பன் கல்லூரியில் வரலாற்றுத் துறையில் பணியாற்றி, பிற்காலத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்

றுப் பேராசிரியராக விளங்கிய டாக்டர் மு. ஆரோக்கிய சாமி அவர்கள் இப்பணியில் தொடர்ந்து ஆர்வம் காட்டு மாறு, அவ்வப்போது என்னை ஊக்குவித்து வந்தார். தமிழ் முதுகலைப்பட்டம் (M.A.) பெற்றவுடன், தனிநிலையில் வரலாற்றில் முதுகலைப்பட்டம் பெறத் திட்டமிட்டேன்; படித்தேன்; பட்டமும் பெற்றேன். சிந்துவெளி நாகரிக ஆய்வுப்பணிக்கு வரலாற்று அறிவு கைகொடுக்கும் எனும் எண்ணத்தோடு வரலாற்றில் பட்டம் பெற்றேன். தொடர்ந்து உலகின் பழம்பெரும் நாகரிகங்களைப்பற்றியும், எழுத்து முறைகளைப்பற்றியும் ஏராளமான செய்திகளைத் தொகுத்து வந்தேன். 1957ல் மே மாதத்தில், சிந்துவெளி நாகரிகச் சின்னங்களான மொகஞ்சொதாரோ, ஹாரப்பா இடிபாடுகள் உள்ள பாகிஸ்தானுக்குச் சென்றுவரத் தக்கார் ஒருவர் மூலமாக முயன்றேன். கடைசி நேரத்தில் மைய அரசு எனக்கு உதவி செய்ய இயலாமையைத் தெரிவித்தது.

இன்றுவரையில் இந்த ஆராய்ச்சிக்குத் தேவையான வாய்ப்பு வசதிகள் கிடைக்கவில்லை. எனினும் என்னால் இயன்றவரையில், இந்தப்பணியினை என் வாழ்நாள் பணியாகக் கொண்டு முயற்சிகள் பல செய்து வருகிறேன். இருபது ஆண்டுகளுக்கு முன்னரே (1959), சிந்துவெளிப் பண்பாட்டை விளக்கும் வகையில், 'சிந்துவெளி தரும் ஒளி' எனும் சிறுநூலினை வெளியிட்டேன். இன்றுவரை, அதற்கு நல்ல வரவேற்பு இருந்துவருகிறது.

இன்று, சிந்துவெளி நாகரிக காலத்திய வரிவடிவத்தைப் பற்றிய ஆராய்ச்சி வளர்ந்து வந்துள்ள நிலையை விளக்கும் முறையில் "சிந்துவெளி எழுத்து வடிவங்கள்" எனும் இச் சிறு நூலினைத் தமிழ் மக்களின் முன்னர் வைக்கின்றேன்.

முப்பது ஆண்டுகளாக நான் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சியின் முடிவுகளைத் திருவருள் கூட்டுமானால், நான்கு ஆண்டுகளில் நல்லதொரு நூல்வடிவில் தருவதற்கு இயலுமென நம்புகின்றேன்.

இந்நூலினைக் காணும் அன்பர்களும் ஆராய்ச்சியாளர்களும், இந்நூலினுள் காணப்படும் கருத்துப் பிழைகளைச் சுட்டிக் காட்டுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

கடந்த பத்து ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சிப் பணிக்குப் பலவகையில் உறுதுணையாக இருந்து வரும் என் மதிப்பிற்குரிய நண்பர் கிணார் (K). அரங்க (R). சச்சிதானந்தம் M. A; B. Com. அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

'ஸ்பெயின் நாட்டுத் திராவிடன்' என்று இந்நாட்டு மக்களிடம் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டவர் திருத்தந்தை ஹென்றி ஹீராசுப் பெருந்தகையாராவர். நாற்பது ஆண்டுகளுக்கு முனபே, தம்மை சிந்துவெளி ஆராய்ச்சிப் பணியில் அவர் ஈடுபடுத்திக் கொண்டார். சிந்துவெளி எழுத்துகள் தொன்மைத் தமிழான பழந்திராவிட மொழிக்கு உரியன என்பதை முதன் முதலாகத் தக்க சான்றுகளைக் காட்டி நிறுவ அவர் முயன்றார். அன்று அவர் தூவிய விதை, இன்று அறிவியல் உரத்தினால் பேராலமரமாக விழுதுகள் ஈட்டுள்ளது. அப்பெரியாரின் திருவடிகளில் இச்சிறு நூலினை, என் அன்பு மலராகத் தூவி வணங்குகின்றேன்.

இந்நூலின் பெரும்பகுதி, 1981-ல் "கலைக்கதிரில்" தொடர்ந்து பல மாதங்கள் வெளிவந்தது. அதைச் சிற்சில மாற்றங்களோடு இந்நூலில் சேர்ந்துள்ளேன். இதற்கு இசைவு அளித்த 'கலைக்கதிரின்' ஆசிரியருக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சென்னை. க. த. திருநாவுக்கரசு

தி. ஆ. 2013,
சித்திரை முதல் நாள் (14-4-1982)



தோற்றம் : 11-9-1888 மறைவு : 14-12-1955

சிந்துவெளி எழுத்துகளைத் தக்க சான்றுகளோடு
தொன்மைத் தமிழாகிய பழந்திராவிடத்திற்கு
உரியன என்று முதன் முதல் அறிவித்த
அறிஞர் பெருந்தகை
திருத்தந்தை ஹென்றி ஹிராசு அவர்களுடைய
திருவடிகளில் அணிவிக்கும் அன்புமலர்

# உள்ளே . . . !

அறிமுகம் ... 4
பொது இயல்புகள் ... 9
முன்னோடிகள் ... 13
இம்மண்ணிற்குரிய எழுத்துமுறை ... 18
பிராமி எழுத்தின் தாய் ... 25
திராவிட மொழிகளின்
தொல்பழங்கால எழுத்து வடிவம் ... 13
செப்புக் கட்டைகளிலும்
மண்பாண்டங்களிலும் காணப்படும் ... 60
குறியீடுகள்

# அறிமுகம்

நடு ஆசியாவில் இருந்தும் மேற்கு ஆசியாவில் இருந்தும் இந்தியாவிற்கு வரும் வழியில் சிந்துவெளி அமைந்துள்ளது. மொகஞ்சொதாரோவிலும் ஹாரப்பாவிலும் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளினால், பண்டைக்கால இந்தியாவின் வரலாற்றில் புதியதோர் ஒளிமிக்க இயல் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது அங்குக் கிடைத்துள்ள தொல் பொருள் சின்னங்கள் பல. அவற்றுள் சுடுமண்ணாலான அச்சு முத்திரைகள், நுரைக்கல் துண்டுகள், செப்புத்தகடுகள், மண்பாண்ட ஓடுகள் போன்றவை நம் ஆய்விற்கு உதவுகின்றன. இந்நால்வகைப் பொருள்களிலும் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. இந்த எழுத்துப் பொறிப்புகளையே, நாம் "சிந்துவெளி எழுத்து வடிவங்கள்" எனச் சுட்டுகின்றோம்.

உலக நாகரிக வரலாற்றில்,சிந்துவெளி எழுத்துகள் ஒரு சிக்கலைத் தோற்றுவித்துள்ளன; இந்திய வரலாற்றில் பெரும் புதிராக இருந்து வருகின்றன; தமிழக வரலாற்றில் ஒரு மறைபொருளாகக் கருதப்படுகின்றன. ஆயினும், மதிநலத்தோடு பேரார்வமும், பெருமுயற்சியும் வாய்ந்துள்ள அறிஞர்கள், இம்மாபெரும் சிக்கலுக்குத் தீர்வுகாண, புதிரை விடுவிக்க, மறைபொருளை வெளிப்படுத்த அயராது உழைத்து வருகின்றனர். இதன் பயனாகப் பல்வேறு விளக்கங்கள் கிடைத்துள்ளன. ஆனால், இன்னும் அந்தப் புதிர் விடுபடவில்லை!

மனித முயற்சியானமையால் அதில் விருப்பு, வெறுப்புகள் இயல்பாகவே இடம்பெற்று விடுகின்றன. எனினும்,

'நம்பிக்கை ஒளி' மட்டும் நந்தா விளக்கினைப் போல் ஆராய்ச்சி யுலகில் சுடர்விட்டு ஒளிர்கிறது! விண்வெளியில் காலெடுத்து வைக்கும் பேராற்றலும். பேரறிவுத்திறனும் வாய்ந்த மனிதனுக்கு, இச் சிந்துவெளி எழுத்துப் புதிர் ஒரு 'சுண்டைக்காயாக' மாறும் காலம் தொலைவில் இல்லை!

மொகஞ்சொதாரோ, ஹாரப்பா போன்ற இடங்களில் கிடைத்துள்ள முத்திரைகளிலும், பிற பொருள்களிலும் பொறிக்கப்பட்டுள்ள ஓவியக் குறியீடுகளே (Pictograph), சிந்துவெளிப் பண்பாட்டைப் பேணிவளர்த்த மக்கள், பேசிய மொழிக்குரிய எழுத்துகளாக இருக்கலாம் என அறிஞர்கள் நம்புகின்றனர். பல நூற்றாண்டுகள் சிந்து வெளி நாகரிகம் நின்று நிலவிய போதிலும், இந்த எழுத்துகளில் எத்தகைய வளர்ச்சியும் உண்டானதாகத் தெரியவில்லை.

சிந்துவெளி எழுத்துகள் ஓவிய எழுத்துகளாக உள்ளன. எனினும், அவற்றுள் சில வேறுபாடுகள் உள்ளன. மீன், விலங்கு, பறவை, மனிதரின் பலவகை உருவங்கள் போன்ற ஓவிய எழுத்துகள் மிகச் சிலவாகவே உள்ளன. மற்ற எழுத்துப் பொறிப்புகள் எல்லாம், தொன்றுதொட்டு உலகவழக்கில் இருந்துவரும் எழுத்து வடிவத்தையே பெரிதும் ஒத்துள்ளன; சில அசைக்குறிகள், ஒலிகளின் எடுத்தல், படுத்தல், நலிதலை உணர்த்தும் ஒலிக்குறிகள், வேற்றுமை உருபுக்குறிகள் போன்றனவையாக உள்ளன. பெரும்பாலான எழுத்துகள் நேர்க்கோடுகளாலான வடிவ அமைப்புடன் காணப்படுகின்றன.

நூற்றுக்கு மேற்பட்ட அறிஞர்கள், இன்று வரையில் சிந்துவெளி எழுத்து ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அணுகும் முறையிலும், விளக்கும் வகையிலும் அவர்கள் இடையே பெருத்த வேற்றுமைகள் உள்ளன. ஆனால்,

சிந்துவெளி எழுத்துகளின் பொதுமைப் பண்புகள் குறித்து அவர்கள் இடையே பேரளவிற்குக் கருத்தொற்றுமை காணப்படுகிறது. அவற்றை அடுத்துக் காண்போம்.

பொதுமைப் பண்புகள்

(1) சிந்துவெளி எழுத்துகள், சிந்துவெளி நாகரிக அழிவுக் காலம் வரையிலும் மாற்றமின்றி, ஒரே தன்மையாக இருந்துள்ளன.

(2) இந்த எழுத்து வடிவ நிலையை அடைவதற்கு முன்னர், நெடுங்காலம் சிந்துவெளி எழுத்துகள் படிப்படியாக வளர்ச்சி அடைந்து இருக்க வேண்டும்; அந்த வளர்ச்சியின் பயனாகத்தான் தேவையான குறிகளை நிலையான வரிவடிவங்களாக, அங்கு வாழ்ந்த மக்கள் வரையறுத்துக் கொண்டனர் என்பது அவ்வெழுத்துகளால் அறியப்படுகிறது.

(3) சிந்துவெளி எழுத்துகள் அசைக்குறிகளாலான அடையாள எழுத்து (Hieroglyphic) நிலையில் உள்ளன.

(4) சிந்துவெளி எழுத்துகள் வலப்புறத்தில் தொடங்குகின்றன. ஆனால் அடுத்த வரியில் இடப்பக்கத்தில் இருந்து தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன.

(5) சிந்துவெளியில் 417 வகையான எழுத்துக் குறிகள் கிடைத்துள்ளன; அவை எண்ணங்களையும் உணர்வுகளையும் விளக்க எழுதப்பட்ட ஓவிய எழுத்துகளாக இருக்கலாம்; அல்லது ஆப்புவடிவ (Cuneiform) எழுத்து முறையில் அமைந்தவையாகவும் இருக்கலாம்.

(6) பெரும்பாலான எழுத்துகளோடு அசைக்குறிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால், சிந்துவெளி எழுத்துகள் ஒலியியல் அமைப்பில் முதிர்ச்சியுற்று இருந்தமை புலனாகிறது.

இப்பொதுமைப் பண்புகள்யாவும், சிந்துவெளி எழுத்துகளின் அமைப்பையும், பயன்பாட்டையும் புரிந்து கொள்ள உதவுகின்றன.

இடர்ப்பாடுகள்

ஓவிய எழுத்துகளாக இவை உள்ளமையால், இன்று நாம் பயன்படுத்தும் தமிழ், கிரந்த, தேவநாகரி, ரோமானிய எழுத்துமுறைகளைப் படிப்பதைப் போன்று படிக்க இயலவில்லை. பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், ஒவ்வோர் ஓவியத்துக்கும் ஒவ்வொரு பொருளைத் தரவேண்டிய தேவை ஏற்படுகிறது. இத்தகைய முறையில் விளக்குவது, அவ்வரிவடிவங்களைப் புரிந்து கொள்ளும் முறையினை எளிமைப்படுத்துகிறது.

இவ்வெழுத்துகளைப் படிக்க முயன்ற அறிஞர்கள், சிற்சில அணுகல் முறைகளைப் பின் பற்றியுள்ளனர். ஒவ்வொரு சின்னத்தின் மதிப்பையும் அறிந்து, அவற்றால் தெரியவரும் சொற்களைப் படிக்க சிலர் முயன்றுள்ளனர். உலகம் நன்கு அறிந்த ஒரு மொழியின் ஒலியை, அந்த வரிவடிவங்களுக்குக் கொடுத்து, அதனால் புலப்படும் சொற்களைப் படிக்க வேறுசில ஆராய்ச்சியாளர்கள் முயன்றுள்ளனர். மற்றும் சிலர் இவ்விரு நெறிமுறைகளையும் இணைப்பு முறையாக வகுத்துக் கொண்டுள்ளனர்.

இரண்டு, மூன்று மொழிகளில் ஒருவாசகம் தரப்பட்டு இருக்குமானால், அதைத் தெரிந்த மொழியின் ஒலியமைதியைக் (இரண்டாவது முறை) கொண்டு படிப்பது எளிது. சிந்துவெளியில் இப்படிப்பட்ட இரு மொழி, மும்மொழி எழுத்துப் பொறிப்புகள் இன்றுவரை கிடைக்கவில்லை. எனினும், திருத்தந்தை ஹீராசும், பின்னிய, ருஷிய அறிஞர்களும் இணைப்பு முறையைப் பின்பற்றி, பழந் திராவிட தொன்மைத் தமிழ்மொழியின் ஒலிமதிப்புகளைக் கொண்டு, சிந்துவெளி எழுத்துகளைப் படிக்க முயன்றுள்ளனர்.

சிந்துவெளிப் பண்பாட்டில், நீண்ட கல்வெட்டுகள் இன்றுவரையில் கிடைக்கவில்லை. ஆனால், அச்சு முத்திரைகளிலும், களிமண் கட்டிகளிலும் நுரைக்கற்களிலும், செப்புப்பட்டைகளிலும், மண்பாண்ட ஓடுகள் சிலவற்றிலும் பொறிக்கப்பட்டுள்ள சிறுசிறு வரிவடிவங்களே கிடைத்துள்ளன. முத்திரைகளில் எழுத்து வடிவங்கள் தலைகீழாக உள்ளன. அவற்றைப் படியெடுத்த பிறகே படிக்க இயலுகிறது.

அம்முத்திரைகளில், எருது, யானை, புலி, ஒற்றைக் கொம்புடைய விலங்கு போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மேல்பகுதியில் ஒன்று முதல் மூன்று வரிகள் வரையிலான எழுத்துப் பொறிப்புகளையும் காணுகின்றோம்.

எல்லா விலங்குகளுமே வலப்பக்கம் முகத்தை வைத்துக் கொண்டுள்ளன. இதனால், வலப்புறம் இருந்து இடப்புறம் படிக்கக் கூடிய முறையில் வரிவடிவங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் துணிந்துள்ளனர். ஒரு பானையின் மீது செதுக்கப்பட்டுள்ள எழுத்துகளில், வலப்புறமுள்ள எழுத்தின் மீது இடப்புறத்தேயுள்ள ஓர் எழுத்தின் கோடு நீண்டு சென்றுள்ளதால், இந்த முடிவு உறுதியாகிறது.

சிந்துவெளி வரிவடிவங்களில் உள்ள சில குறிகளை எளிதாகப் படித்துவிடலாம். இந்தக் குறிகள் ஒன்று முதல் பத்துப் பன்னிரண்டு எண்ணிக்கையுடைய குட்டை அல்லது நீண்ட செங்குத்துக் கோடுகளாகும். சில அறிஞர், அவற்றை வெறும் எண்களாகவே கொண்டுள்ளனர். ஆனால், சிந்துவெளி வரிவடிவ ஆராய்ச்சியில் ஈடுபட்ட என் போன்ற சிலருக்கு, அவை வெறும் எண்களாகத் தோன்றவில்லை. பலவகையான கூட்டு எழுத்துகளில் (பக், 47) வரிவடிவச் சின்னங்களின் முன்னும் பின்னும் இத்தகைய கோடுகள் காணப்படுகின்றன. இதனால், சொற்களின் ஒலிகளைப் புலப்படுத்த அக்கோடுகள் பயன்படுத்தப் பெற்றிருக்கலாம் எனும் எண்ணம் எழுகிறது. வருங்காலத்தில் அறிவியலின் உதவியால் இந்தப்புதிர் எளிதில் விளக்கம் பெறக் கூடும்.

இயல் 1

# பொது இயல்புகள்

முன்னுரை

இந்தியத் துணைக்கண்டத்தின் மிகத் தொன்மையான எழுத்து வடிவங்களை, முதன்முதல் இந்த நாட்டில் வழங்கிய எழுத்து வடிவங்களைச் "சிந்துவெளி எழுத்து வடிவங்கள்" எனத் தொல்லியல் அறிஞர்கள் சுட்டுகின்றனர். பழைய பஞ்சாப்பின் மாண்ட்கொமெரி மாவட்டத்தில் (பாகிஸ்தான்), இரவி - சட்லெஜ் ஆறுகளுக்கு இடையில் அகழ்ந்தெடுக்கப் பட்ட (1920) தொல்பொருள் சின்னம் ஹாரப்பா எனப்படுவதாகும். 1922-ஆம் ஆண்டில் சிந்து மாநிலத்தில் (பாகிஸ்தான்), லர்க்கானா மாவட்டத்தில் எழுபது அடி உயரமுள்ள மண்மேடு ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டது. இந்தச் சின்னத்தை மொகஞ்சொதாரோ என்பர்.

இவ்விரு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட தொல் பழங்கால முத்திரைகளில் காணப்படும் எழுத்து வடிவங் களையே, "சிந்துவெளி எழுத்து வடிவங்கள்" எனப் போற்றி வருகிறோம். சிந்துவெளிப் பள்ளத்தாக்கில், மிகப்பழங்காலத்தில் பழக்கத்தில் இருந்த எழுத்துமுறையை இப்பெயரால் சுட்டுவது இன்றைய மரபாகும். 1922 - ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தக் கண்டுபிடிப்புகள் உலக அறிஞர் களின் கருத்தைப் பெரிதும் கவரலாயிற்று; இந்தியத் தொல் லியல் ஆராய்ச்சியில் முதன்மை இடத்தைப் பெறலாயிற்று.

சர் ஜான் மார்ஷல் இவ்விரு இடங்களிலும் தொடர்ந்து நடத்திய அகழ்வாராய்ச்சியால், புதியதொரு நாகரிகம் இந்தியாவில் தொல் பழங்காலத்திலேயே சிறப்புற்று விளங்கியமை உலகிற்குத் தெரிய வந்தது. உலகின் தொல் பழங்கால நாகரிகங்களோடு ஒத்த சிறப்புடைய தொன்மையான நாகரிகம், இந்திய மண்ணில் சிறப்புற்று விளங்கியமை பலருடைய கருத்தைக் கவர்ந்தது. பண்டை உலகின் வெண்கலக் கற்கால நாகரிகங்களுள் ஒன்றாக, இந்நாகரிகம் இன்று போற்றப்படுகிறது.

தோற்றம்

உலகில் வெண்கலக் கற்கால நாகரிகம் சிறப்புற்ற காலத்திலேயே (கி.மு. 3000 அளவில்), எழுத்து முறையை மனிதன் முதன்முதலாகப் பயன்படுத்தத் தொடங்கியதாகக் கூறுவர். உலகில் எந்த நாட்டில் முதன் முதல் எழுத்துமுறை கண்டுபிடிக்கப்பட்டது என்பதை இன்று வரை உறுதியாக அறிய இயலவில்லை. இந்தப் புதிரோடு சிந்துவெளி எழுத்துகளின் தோற்றமும் பிணைந்து கிடக்கிறது. 1934-ஆம் ஆண்டில், சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்த டாக்டர் ஜி.ஆர். ஹண்ட்டர் மொழிந்துள்ள கருத்து, இங்கு நம் கருத்தைக் கவருவதாகும்.

"மொகஞ்சொதாரோ, ஹாரப்பாவில் கிடைத்துள்ள எழுத்துவடிவங்களை மேற்போக்காக நோக்குகின்ற பொழுது அவை தனித்த இயல்புடையனவாகத் தோன்றுகின்றன. அது சுமேரிய எழுத்தும் அன்று: நமக்குத் தெரிந்த தொல்பழங்கால எழுத்துகளும் அல்ல. ஆனால், அவை பண்டை நாகரிக எழுத்துகள் பலவற்றோடு சிற்சில ஒப்புமைப் பண்புடையனவாகத் தோன்றுகின்றன. இந்த ஒப்புமை இயல்பு, தற்செயலாக அமையும் ஒப்புமைப் பண்பாகவே இருத்தல்வேண்டும். குறிப்பிட்ட ஒரு பொருளைச் சித்திர எழுத்துகளின் மூலம் புலப்படுத்தும் பொழுது, ஒத்த இயல்பு அவற்றிடையே அமைவது இயற்கை. இதனை

யாரும் விலக்க இயலாது. சிந்துவெளி எழுத்துகளில் பேரள விற்குக் காணப்படும் வடிவங்கள், பிறமொழி எழுத்து களோடு ஒப்புமை யுடையனவாகத் தோன்றலாம். எடுத்துக்காட்டாக.



எனும் வடிவங்களைக் காட்டலாம். இன்றைக்கு நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளைக்கொண்டு, இந்த எழுத்துமுறை எதிலிருந்து வளர்ந்துள்ளது எனத் துணிய இயலவில்லை. சுமேரிய எழுத்து முறைக்கும் சிந்துவெளி எழுத்து முறைக்கும் பொதுவான தலையூற்று ஒன்று இருந்திருத்தல் கூடும் எனக் கொள்ளுவதே பொருத்தம் உடைத்தாகும்.''[1]

எழுத்து வடிவினைக் கண்டறியும் முயற்சி

சிந்துவெளி எழுத்துகள் இந்திய வரலாற்றின் பெரும் புதிராக-மறை பொருளாகவே இருந்து வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னர், இராபர்ட் தாவரே (Robert-Davreu) எனும் அறிஞர் 'உலகின் கடைசிப் புதிர்கள்' பற்றி ஆராய்ந்தார். அவர்,

> சென்ற ஐம்பது ஆண்டுகளாகக் கருத்துடன் நடத்தப்பட்டு வரும் அகழ்வாராய்ச்சிக்குப் பின்னரும், சிந்துவெளி நாகரிகம் தொடர்ந்து பல வகைப் புதிர்களின் தலையூற்றாக இருந்து வருவது வியப்பாக இருக்கிறது. ஒவ்வொரு புதிய கண்டு பிடிப்பின் கூறுகளும், அதனை இன்னும் தெளிவற்ற ஒன்றாக மாற்றி வருகிறதைக் காணுகின்றோம். புதிய விளக்கங்களுக்கு இடம் தருவதாக அது அமைந்து விடுகிறது. மற்றவற்றைப் போலவே

> இப்புதிய விளக்கங்களும் நம்ப இயலாதவையாகத் தோன்றுகின்றன......... அமைப்பு முறையிலும், நுட்பமான விளக்கங்களிலும் பேரீடுபாடு கொண்டிருந்த ஓரின மக்கள், தங்களுடைய வரலாறு, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் பற்றிய பதிவுகளை விட்டுச் செல்லாதது விந்தையாகும். இன்று வரை நன்கு இனங்கண்டு கொள்ள இயலாத நிலையில் உள்ள அவர்களுடைய எழுத்து முறை, சிந்துவெளிப் பண்பாட்டைப் புரிந்து கொள்ள உதவும் திறவுகோலைத் தன்னகத்தே ஒருகால் கொண்டு இருக்கலாம்[2]

என்று கூறியுள்ளமை இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது.

சிந்துவெளி எழுத்து வடிவங்கள் அணிமைக்கால ஆராய்ச்சிகலால், முத்திரைகளில் மட்டும் அல்லாமல், செப்புத் துண்டுகளிலும், மண்பாண்ட ஓடுகளிலும், அருகிக் காணப்படும் சில கருவிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

எழுத்துகள் ஓரளவிற்குச் சீர்மையாகவும் அழகாகவும் பொறிக்கப் பட்டுள்ளன. ஆனால், அவை கணிசமான எண்ணிக்கை யுடையனவாக இல்லை. சிந்துவெளி எழுத்தின் பட்டியலை விரிவாகவும் செம்மையாகவும் தயாரித்துள்ள திரு ஐராவதம் மகாதேவன் கருத்துப்படி, 417 குறிகளே அத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன[3] என்பது இங்குக் கருதத்தக்கது. மிகக் குறுகிய வடிவும் செறிவும் உடையனவாக அவை உள்ளன. இதனால், உலகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த அறிஞர்கள் பலர், இந்த எழுத்தின் வடிவங்களைக் கண்டு அறிவதில் பேரார்வம் காட்டி வருகின்றனர். "மினோவன் (கிரேக்க) எழுத்துகள் பைத்தியக்காரர்களிடம் துன்பப்பட்ட அளவிற்கு ஊாரப்பா எழுத்துகள்

இன்னும் அவர்களிடம் சிக்கிச் சீரழியவில்லை"[4] என்று ஸ்டுவர்ட் பிக்கட் மொழிந்துள்ள கருத்து, சிந்துவெளி எழுத்து ஆராய்ச்சி, நகைப்புக்கு இடம் அளிக்கும் நிலையை இன்னும் அடையவில்லை என்பதைத் தெரிவிக்கிறது.

சிந்துவெளியில் இருமொழிக் கல்வெட்டுகள் இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும், அறிஞர்கள் தங்கள் பன்மொழி அறிவையும், ஆராய்ச்சி அனுபவத்தையும் கொண்டு அந்த எழுத்து வடிவங்கள் எந்த மொழிக்கு உரியன என்பதையும், அவற்றிற்குரிய ஒலிகள் யாவை என்பதையும், அவை உணர்த்தும் பொருள்கள் யாவை என்பதையும் கண்டு அறிவதில் பேரார்வம் காட்டி வருகின்றனர்.

## இயல் 2

# முன்னோடிகள்

### முதன் முயற்சி

முதன்முதல் 1925இல், இந்த எழுத்து வடிவத்தை ஆராய்ந்தவர் எல்.ஏ. வேடல் (L.A. Waddell) என்பவராவர். அவர் சுமேரிய எழுத்துக்கும் சிந்துவெளி எழுத்து வடிவங்களுக்கும் இடையே ஒப்புமை இருப்பதாகக் கூறினார். சுமேரிய நாகரிகமும் ஆரிய நாகரிகமும் ஒன்றெனக் கருதியவர் அவர். வேதகாலத் தெய்வங்களின் பெயர்களையும், முனிவர்களின் பெயர்களையும், புராணச் செய்திகள் பலவற்றையும் அவர் சிந்துவெளி எழுத்து வடிவங்களில் படித்துக் காட்டினார்.[5] இதற்கு அவர் அடிப்படையாகக் கொண்ட சான்றுகள் ஐயப்பாட்

டிற்கு உரியனவாக உள்ளன; பின்பற்றிய ஆய்வுமுறை களும் அனைவராலும் ஒப்புக் கொள்ளத் தக்கவையாக அமையவில்லை. ஆரிய நாகரிகமே இந்திய நாகரிகங்களுள் சிறந்தது எனும் தவறான அடிப்படையில் செய்யப்பட்ட ஆராய்ச்சியாக இது அமைந்துள்ளது.

அம்முத்திரைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் ஆரியச் சார்புடையனவாக உள்ளனவாம். கி.மு. 3100 முதல் வாழ்ந்த சுமேரிய அல்லது பொனீஷியக் கடலோடி களின் தலைவர்களுடைய பெயர்களாகவும் அவை உள்ளன. அந்த முத்திரைகள் அதிகாரிகளின் பதவி இலச்சினைகள் எனவும், இடுகாட்டு-தாயத்துகள் எனவும் அவர் வகைப் படுத்திக் காட்டியுள்ளார். அவற்றுள் சில சிறப்புமிகு வரலாற்றுப் புகழ் வாய்ந்த மெசபொடோமியாவின் சுமேரிய, அக்கேடிய அரசர்களின் பெயர்களாக உள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விளக்கம் காலவரன்முறை வழுவுடையதாக உள்ளது. ஆரியர் இந்தியாவிற்கு வந்தமை கி. மு. 1800க்கும் கி.மு. 1500க்கும் இடைப்பட்ட காலமாகும். இவ்வாய் வாளர் இதனை கி.மு. 3000 அளவிற்குக் கொண்டு செல்லுவது இன்றைய நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ள கருத்திற்கு முரணாக உள்ளது. 'ஊர்-நிரை' என்பது அசீரியர் பெயர். இதனை அவர் 'உருவங்கா', 'பர்-அம-அகா' எனும் பெயர்களில் இருந்து 'ஹரி அசுவா' என வும், 'பிரம அசுவா' எனவும் திரித்து வேதகாலப் பெயர் களாகக் கொள்ள முயலுவது மொழியியல் அடிப்படைக் கொள்கைகளுக்குப் பொருந்தவில்லை. இவற்றைப்போன்று மிகப் பல சொற்களுக்கு, அவர் தந்துள்ள விளக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்கனவாக இல்லை.

ஹீராசுப் பெருந்தகை கூறுவதைப் போன்று "அவ ருடைய ஆய்வுமுறை தக்க அடிப்படையில் அமையவில்லை,

அம்முறையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அவற்றுள் முதன்மையானது ஒரே வகையான குறியீட்டிற்கு எல்லா விடத்திலும் ஒரே வகையான மதிப்பினை அவர் தராமை யாகும்..... ஒப்புமைக் கூறுகளைக் கொண்டிராத வடிவங் களுள் ஒன்று, மற்றொன்றிற்குச் சமம் என அவர் கொண் டுள்ளமைக்குரிய காரணம் யாதெனப் புலப்படவில்லை, முத்திரைகளின் கீழ்ப்பகுதிகளில் காணப்படும் 'இனக்குறி விலங்குகளை' எல்லாம் எழுத்து வடிவமாக அவர் கொண் டுள்ளமை தவறாகும்''.[6]

சுமேரிய எழுதித்து வடிவங்களுக்கும் சிந்துவெளி எழுத்து வடிவங்களுக்கும் இடையே காணப்படும் பொதுமைப் பண்பு இரண்டு விழுக்காட்டு அளவினதேயாகும்.[7] எனவே, இந்தக் கருத்தை ஆராய்ச்சியாளர் ஏற்றுக்கொள்ளத் தயங்கு கின்றனர்.

அட்டவணைப்படுத்திய முதல்வர்

1931 ஆம் ஆண்டு பிரான்நாத் (Prannath) சிந்துவெளி எழுத்துகளைக் கண்டறிவதற்குச் சில புதிய நெறிமுறை களைத் தெரிவித்தார். சிந்துவெளி எழுத்துகளை இவர் முதன்முதல் அட்டவணைப் படுத்தித் தந்துள்ளார். இவ ருடைய தந்துரைகள் தற்காலிகமானவை; ஒருதலைச் சார்பானவை. வேடல்லைப் போலவே, இவரும் 'சுமேரி யரும் வேதகால அல்லது அதற்கு முற்பட்ட கால ஆரியரும் ஓரினத்தவரே' என்று துணிந்துள்ளார். ''தேர்ந்தெடுக்கப் பட்ட கல்லெழுத்துகளில்'', சுமேரிய, ஆரியத் தெய்வங்களின் பெயர்களை இவர் கண்டுபிடித்துள்ளதாகக் கூறுகிறார்.[8] இக்கருத்தும் வேடலினுடைய கருத்தினைப் போன்ற குறை பாடுடையதாகவே தோன்றுகிறது.

ஓரசைச் சொற்கள்

அசோகனுடைய பிராமி எழுத்து வடிவம் சிந்துவெளி எழுத்துகளிலிருந்து தோன்றித் திரிந்து வளர்ந்ததாக

எஸ். லேங்டன் (S. Langdon) கருதுகிறார். இவர் சிந்துவெளி எழுத்து வடிவங்களை இனங்கண்டு கொள்வதற்குப் பல புதிய ஆக்கமுறையான நெறிமுறைகளை வகுத்துத் தந்தார். சிந்துவெளி எழுத்துக் குறியீடுகள் யாவும் ஓரசைச் சொற்களாக (மெய்யும் உயிரும் சேர்ந்த ஓரசையாக) உள்ளன எனும் உண்மையை உணர்த்திய பெருமை இவருக்கே யுரியதாகும். இவருடைய முயற்சியால் சிந்துவெளி எழுத்துகள், சுமேரிய எழுத்து வடிவங்களோடு தொடர்புடையன அல்ல என்பது நிலை நாட்டப்பட்டுள்ளது. ஆனால், சிந்துவெளி எழுத்துக்கும் எகிப்திய அடையாள எழுத்து (Hieroglyphic) முறைக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதை இவர் தெளிவுறுத்தி யுள்ளார்[9].

வலமிருந்து இடம்

சர் ஜான் மார்ஷலின் புகழ்வாய்ந்த "மொகஞ்சொதாரோவும் சிந்துவெளி நாகரிகமும்" எனும் நூலில் (அதி. 23) இக்கருத்து இடம் பெற்றிருக்கிறது. இதே நூலில் (அதி 22) இதற்கு நேர்மாறான கருத்தினை சி.ஜே. கேட் (C.G. Gadd) என்பவர் தெரிவித்துள்ளார். சிந்துவெளி எழுத்துகள் ஓரளவிற்கு அசை வடிவினவாக உள்ளன என்பதை இவர் அறிவித்துள்ளார். அவ்வசைச் சொற்கள் உணர்த்தும் பெயர்கள், பழைய இந்திய-ஆரிய மொழி ஒன்றினுக்கு உரியதாகும் என இவர் நம்புகிறார். முத்திரைகளில் காணப்படும் குறிகள் பொதுவாகப் பெயர்களாக உள்ளன என்றும், எழுத்துமுறை வலப்புறம் தொடங்கி, இடப்புறம் நோக்கிச் செல்லுவதாகவும் கேட் கருதலானார்.

H-173 எனும் முத்திரையில் உள்ள



எனும் குறிகளை 'புத்ர' (மகன்) என்று இவர் கொண்டுள்ளார். இவர் இவ்வாறு கொள்ளுவதற்குரிய அடிப்

படையை, அளவை முறையில் தெளிவுறுத்தவில்லை. தம்முடைய உய்த்துணர்வால் இவ்வாறு கருதுவதாக இவர் தெரிவித்துள்ளார்[10].

அதிகாரிகளின் பெயர்கள்

சர் பிளிண்டர்ஸ் பெட்ரி (Sir Flinders Petrie) என்பவர் பண்டைக்கால எகிப்திய முத்திரைகளைப் போன்று சிந்துவெளி எழுத்துகளைக் கொண்ட முத்திரைகளும், அரசாங்க அதிகாரிகளுடையனவாக இருக்க வேண்டும் என்று நம்புகிறார். இவ்வெழுத்துகள் கால்வாய்களையும், சாலைகளையும் மேற்பார்வை செய்த அதிகாரிகளின் பதவிப்பெயர்களையும், நீர்வழிப் போக்குவரவு அதிகாரிகளின் பதவிப் பெயர்களையும் குறிக்கின்றனவாம். மற்றும் சில, விடுதிகளின் பதிவாளர்களையும், விளையாட்டுத்துறை அதிகாரிகளையும் சுட்டுவதாகப் பெட்ரி கருதுகிறார்[11]. இந்த ஆய்வாளரை அடியொற்றி சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்தால், அவை யாவும் அங்கு வாழ்ந்த ஒவ்வொரு குடிமகனையும் ஒவ்வோர் அதிகாரியாகக் கருத இடமளிக்கும் என சி. எல். பேபரி (C. L. Fabri) கிண்டல் செய்கிறார்[12].

சிந்துவெளி எழுத்துகளும் ஈஸ்டர் தீவு எழுத்துகளும்

ஹங்கேரிய நாட்டு அறிஞர் எம். ஜி. டி. ஹெவசே (M. G. de Hevasey), இந்த முத்திரைகளில் உள்ள குறியீடுகளை, நமக்கு ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஈஸ்டர் தீவின் கல்லெழுத்துகளோடு தொடர்புடையவைகளாகக் கருதலானார். வடிவ அமைப்பில் காணப்படும் சில ஒப்புமைப் பண்புகளே, இத்தொடர்புக்குக் காரணம் என்பதை அவர் தெளிவுறுத்தியுள்ளார்.[13]

இவரைப் பின்பற்றி ஹெனே கெல்டரின் (Heine-Geldern), பில்லிமோரியா (Bilimoria) என்பவர்களும் இந்தத் தொடர்பினை ஆராய்ந்துள்ளனர். இவர்களுடைய சிந்

தனைக் குழப்பமே இத்தகைய ஆய்விற்குக்காரணம் என்பர். ஈஸ்டர் தீவு குறியீடுகளை, எழுத்துகள் என்று சொல்லுவதற்கு இல்லை; அவற்றைத் தொகை வகைப்படுத்தி எழுத்துகளாகவோ, அசைகளாகவோ, சொல்லெழுத்தாக (Logograph) வோ இனங்காண இயலவில்லை. இப்படிப் பட்ட குறியீடுகளை ஓரளவிற்கு நன்கு வளர்ச்சியுற்றும், முறைப்படுத்தப்பட்டும் உள்ள சிந்துவெளி எழுத்துகளோடு தொடர்புபடுத்திக் காட்ட முயலுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.[14]

இயல் 3

# இம் மண்ணிற்குரிய எழுத்துமுறை

1934 ஆம் ஆண்டு கே. என். தீக்ஷித் (K. N. Dikshit) என்பவர், "சிந்துவெளியில் வரலாற்றிற்கு முற்பட்ட நாகரிகம்" எனும் நூலில், "சிந்துவெளி எழுத்துகள் ஐயத்திற்கு இடமின்றித் தனிப்பட்ட நிலையில், இந்த நாட்டில் தோன்றி வளர்ந்த எழுத்துமுறையாகும். மேற்போக்கான ஒப்புமைப் பண்புகள் சில, சுமேரிய, எகிப்திய எழுத்துகளுக்கும் சிந்துவெளி எழுத்துகளுக்கும் இடையில் காணப்படுவது எளிதில் புறக்கணிக்கத் தக்கனவாகும். இவை எதிர்பாராத தற்செயல் நிகழ்ச்சியாகவே தோன்றுகிறது" என்று அறிவித்துள்ளார்.[15]

ஆரியம் அல்லாத மொழி ஒன்றின் எழுத்துகள்

லேங்டனுடைய கருத்தினை ஏற்றுக் கொண்டு, அம் முறையில் சிந்துவெளிக் குறியீடுகளை முதன்முதல் முறை

யாகப் பகுத்து ஆராய்ந்தவர் ஜி.ஆர். ஹண்ட்டர் (G.R. Hunter) என்பவராவர். ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்திற்கு அவர் வழங்கிய டாக்டர் பட்ட ஆய்வுரையில் பின்வரும் முடிவுகளை வெளியிட்டுள்ளார்.

1. சிந்துவெளி நாகரிகத்தைப் போற்றி வளர்த்த மக்கள் ஆரியர் அல்லர். அது ஆரியருக்கு முற்பட்ட இந்தியப் பழங்குடி (திராவிடர்) மக்களுடைய நாகரிக மாகும். இந்தப் பழங்குடி மக்களின் வழி வந்தவர்களே இன்று பிராகுவி (Brahuis) மொழி பேசும் மக்களாக இருத்தல் கூடும்.

2. பிராமி எழுத்துகள், சிந்துவெளி எழுத்துகளி லிருந்து திரிந்து வளர்ந்தனவாகும்.

3. எழுத்துகள் ஒலியமைப்பு முறையினை (Phonetic) அடியொற்றி அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும், அவை சித்திர எழுத்துகளிலிருந்தும் கருத்து வடிவ எழுத்துகளில் இருந்துமே வளர்ச்சி யுற்றுள்ளன.

4. கி.மு. 3000த்திற்கு முன்பே, இந்த எழுத்துமுறை தோன்றியிருக்க வேண்டும்.

5. எகிப்திலிருந்து சில எழுத்து வடிவங்களைக் கடன் வாங்கி இருக்கலாம்; கிரீத் (Crete) எழுத்து முறையோடு இவற்றிற்குத் தொடர்பும் இருந்திருக்கலாம்.

6. இந்த எழுத்துகள் வலத்திலிருந்து இடப்பக்கம் நோக்கியும், பிறகு இடமிருந்து வலமாகவும் எழுதப்படும் முறையுடையன.[16]

இவ்வாய்வாளரின் கருத்துகளே, முதன்முதலாகத் தக்க அடிப்படையில் சிந்துவெளி எழுத்துகள், இந்தியாவிற்குரிய திராவிட இன மக்களின் எழுத்துகள் என்பதையும் பிராமி

எழுத்துகள், இவற்றின் திரிந்த வடிவங்கள் என்பதையும் அறிவுறுத்தின.

### கருத்தோவிய ஒலி வடிவங்கள்

1934இல் லீப்சிக்கிலிருந்து இத்தாலிய நாட்டு அறிஞ ரான பியூரோ மெரிக்கி (Fiero Meriggi), "பெட்ரி கல்வெட்டு களை விளக்கி யுரைத்துள்ளாரே வொழிய, அவற்றில் உள்ள எழுத்துகளை இனங்கண்டறியவில்லை" என்று உரைத்தார். கருத்து ஓவிய-ஒலி வடிவங்களாகச் சிந்துவெளி எழுத்துகள் உள்ளன என்பது இவருடைய நம்பிக்கை. பெரிதும் இவை ஹிட்டைட் அடையாள எழுத்துகளோடு (Hieroglyphic) ஒப்புமையுடையன. முத்திரைகளில் சிறப்புப் பெயர்கள் பொறிக்கப் பட்டிருப்பதாக இவர் கருதவில்லை; ஆட்சி யாளரின் இலச்சினை பொறிக்கப்பட்ட முத்திரைகளாகவே அவற்றைக் கொண்டுள்ளார். நில அளவை மேற்பார்வை யாளர், அரசனுக்கு வெண்கொற்றக் குடையினைப் பிடிப் பவர், கோயிலின் தானியக் களஞ்சியக் காப்பாளர் போன்ற பதவிப் பெயர்களே முத்திரைகளில் காணப்படுவதாக இவர் குறிப்பிட்டுள்ளார்[17].

### தாள் நாணயமே முத்திரைகள்

1936 இல் மகேந்திர காவியதீர்த்தர் என்பவர் புதிய தொரு கருத்தினைத் தெரிவித்துள்ளார். சிந்துவெளி முத்திரைகள், உண்மையில் முத்திரைகள் அல்ல. அவை அந் நாட்டுத் 'தாள் நாணயங்கள்' ஆகும். வாணிகத்தில் ஈடு பட்டிருந்த சிந்துவெளி மக்கள் அவற்றைத் தாள் நாணயத் தைப் போன்று பயன்படுத்தி இருக்க வேண்டும். அவை பல்வேறு நாட்டிற்குரியன; அவற்றில் காணப்படும் படங்கள் அந்தந்த நாட்டைச் சுட்டும் குறியீடுகளாகும் என்பர். ஏறக்குறைய பதினொரு முத்திரைகளை இந்த முறையில், இவர் படித்து அறிந்ததாகத் தெரிவித்துள்ளார்[18].

இவருடைய ஆய்வின் முடிவாகச் சிந்துவெளி எழுத்துகள் ஒருவகையான சம்ஸ்கிருத மொழியைச் சேர்ந்தனவாகத் தெரிகிறது. ஆயினும், வடமொழிவாணர் இவருடைய கண்டுபிடிப்பு, மொழிநூற் கொள்கைக்கு முரணான முறையில் அமைந்துள்ளது என்பர்.

கீழ்வாய் இலக்க வழக்கு

1937இல் அலன் எஸ்.சி. ராஸ் (Alan S.C. Ross) என்பவர் சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்தார்; மொகஞ்சொதாரோவில் பதின்கூற்று கீழ்வாய் இலக்க முறை வழக்கில் இருந்ததைக் கண்டு பிடித்துள்ளார்; சிந்துவெளியில் வழங்கிய மொழி இந்தோனேசியப் பண்டை மொழியோடு தொடர்பு உடையதாகக் கருதுகிறார்[19].

வாணிகர் வளர்த்த எழுத்து முறை

"இருக்குவேத காலப் பணியரும் மொகஞ்சொதாரோ-ஈஸ்டர் தீவு எழுத்துகளும்" எனும் ஆய்வுரையில், என். எம். பில்லிமோரியா (1939), "எந்த இரு அறிஞர்களும் இதுவரையில் சிந்துவெளி முத்திரைகளின் பயன்பாட்டைப் பற்றி ஒத்த கருத்துடையவராக விளங்கவில்லை. இதைவிட எழுத்துகளைப் படித்தறிவதில் யாரிடத்திலும் ஒத்த கருத்தினைக் காணோம். முத்திரைகளைச் சிலர் வாணிகக் குறிப்புகளைக் கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர். மற்றும் சிலர், அவற்றை வாணிகக் கடிதங்கள் என்றும், கடன் பத்திரங்கள் என்றும் கருதுகின்றனர். பேராசிரியர் ஹெவசே முத்திரைகள் வீடுகளிலேயே கிடைத்துள்ளன என்பதால், அவை தெய்வ வழிபாட்டில் தெய்வங்களுக்குப் படைக்கப் பட்ட படையல் பொருள்களாக இருக்க வேண்டும் என்பர். (விலங்கு) தெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட அம்முத்திரைகளில் காணப்படும் எழுத்துகள், அவற்றைப் படைத்தவர்களுடைய பெயர்களாக இருக்க வேண்டும் என்று அவர் நம்புகிறார்" என்று தெரிவிப்பதோடு அமையவில்லை. "இருக்கு வேதத்தில் ஊர்ஊராகச் சுற்றித்

திரிந்த வாணிகரே, 'பணியர்' என்று சுட்டப்படுகின்றனர். அவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். தங்கள் வாணிகக் கணக்கைக் குறித்து வைப்பதற்காக, அவர்கள் சிந்துவெளி எழுத்துகளை முதன்முதலாக வடித்து, பயன்படுத்தினர்" என்றும் இவர் சிந்துவெளி எழுத்தின் தோற்றத்தைக் குறித்து விளக்கியுள்ளார்.[20] ஆனால், அவ்வெழுத்துகளை எவ்வாறு படித்து அறிவது என்பதற்கு, இவர் யாதொரு நெறிமுறையையும் வகுத்துத் தரவில்லை. இதனால், இதனை இவருடைய கருத்து எனும் அளவிலேயே சுட்ட வேண்டியுள்ளது. தவத்திரு ஹீராசுப் பெருந்தகை, ஹெவசேயினுடைய கருத்து முற்றிலும் தற்செயல் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது என்று மறுத்துள்ளார்.

ஹிட்டைட் எழுத்துகளும் சிந்துவெளி எழுத்துகளும்

பேராசிரியர் ரோசனி (Hrozny), ஹிட்டைட் (Hittite) மொழி ஆராய்ச்சி வல்லுநராவர். அவர் சிந்துவெளி எழுத்துகளைப் பல முறை திரும்பத்திரும்ப ஆராய்ந்து படிக்க முயன்றுள்ளார். "கருத்தைக் கவரத்தக்க வகையில் சிந்துவெளி எழுத்துகளுக்கும் ஹிட்டைட் எழுத்துகளுக்கும் இடையே ஒப்புமைப் பண்புகள் உள்ளன. நன்கு வளர்ச்சி அடையாத சிந்துவெளி எழுத்துகள் ஹிட்டைட்டின் அடையாள எழுத்துகளை முன் மாதிரியாகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளன. ஒரே அசையை அமைப்பதற்குப் பெரிதும் பலவகையான குறியீடுகளை அது பயன்படுத்துகிறது. ஷ, ஷி, ஷ் அல்லது சி, ச, சி என்னும் ஒலிகளை உணர்த்த ஐம்பது குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன" என்று ரோசனி கூறுகிறார்.

மேலும், ஷி, சி, குசி எனும் ஒலிகள் பல்முறை, பல்வேறு வகைப்பட்ட ஒலிகளால் சுட்டப்படுகின்றன என்கிறார்.[12] இதிலிருந்து இவர் பின்பற்றிய முறையில் யாதோ குழப்பம் இருப்பதாகத் தெரிகிறது. காலவரன்முறை அடிப்

படையிலும் ஹிட்டைட் எழுத்துமுறைத் தொடர்பு பற்றிய செய்திகள் வழுவுடையனவாக உள்ளன. "பொருத்தமற்ற கருதுகோள்களையும் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டது இவருடைய ஆராய்ச்சி. காலத்தால் ஆயிரம் ஆண்டுகள் பிற்பட்ட ஹிட்டைட் எழுத்து முறையிலிருந்து சிந்துவெளி எழுத்துகள் தோன்றின என்று கூறுவது வரலாற்று நிகழ்ச்சிகளைத் தலைகீழாக மாற்றுவதாகும்"[22] என்பர் டிரின்ஜர் (Diringer).

## தாந்திரிக நூல்களும் சிந்துவெளி எழுத்துகளும்

சுவாமி சங்கரனானந்தர், "சிந்துவெளி மக்கள் பேசுகின்றனர்" எனும் நூலினை எழுதியுள்ளார். அந்நூலில் சிந்துவெளி எழுத்துகள் பற்றிய ஆராய்ச்சி சிறப்பிடம் பெற்றுள்ளது. அதில் பின்வரும் தரவுகளைக் காணுகின்றோம்: (1) சீனருக்கும், இந்தியருக்கும் எகிப்தியருக்கும், லிபியருக்கும், யூதர்களுக்கும் அராபியர்களுக்கும், போனிசியருக்கும் கிரேக்கருக்கும் ரோமானியருக்கும் பொதுவான ஒரு தாய்மொழி மிகப் பழங்காலத்தில் இருந்திருக்க வேண்டும். (2) சம்ஸ்கிருதம் தேவர்களால் படைக்கப்பட்டது. பண்டைய மொழியின் ஓரசைச் சொற்களில் புரோகிதர்கள் விபக்திகளையும் பிரத்தியாயங்களையும் சேர்த்து அதனை வளப்படுத்தினர். (3) இன்றைக்கு நம்மிடையே உள்ள தாந்திரிக நூல்கள் சிந்துவெளி நாகரிகத்தின் காலத்திலேயே வழக்கில் இருந்தன.

இந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, சிந்துவெளி எழுத்துகளை இவர் படிக்கத் தொடங்கியுள்ளார். தாந்திரிக நூல்களில் உள்ள மறைபொருள் உடைய சொற்களைக் கொண்டு, மொகஞ்சொதாரோ எழுத்துகளை விலக்க இவர் முயன்றுள்ளார். தாந்திரிக சொற்கள் யாவும் அடையாள எழுத்துகளைக் கொண்டு அமைக்கப்பட்டவை என்பது இவருடைய நம்பிக்கை. "பசுபதி முத்திரை" எனச் சொல்லப்படும் மண்தகட்டில் உள்ள எழுத்துகள்

சித்திரங்கள் அல்ல என்பது இவருடைய கருத்து. அதனைப் பின்வருமாறு இவர் படித்துள்ளார்: "எல்லா நீர்வழி (ஆற்றுவழி)களையும் பறவைகள் மூடிக்கொண்டுள்ளன."[23]

சங்கரானானந்தரின் ஆய்வு முறையையும் முடிவுகளையும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. தாந்திரிகச் சொற்கோவையில் காணப்படும் விளக்கங்கள், கருத்து வகையில் நெகிழ்ச்சியுடையன; வெவ்வேறு மனிதர்களால், வெவ்வேறு வகையாக அவற்றுக்கு வடிவம் கற்பிக்கப்படலாம். அவருடைய விளக்கங்கள் எளிதில் பயன்படுத்த இயலாத இழுபறிப் போக்குடையனவாக உள்ளன. மற்றும் அக்குறியீடுகளுக்கு மாறிமாறி வரும் பயன்மதிப்பினை அவர் அளிப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை; முடிவுகள் யாவும் தற்சார்பு உடையனவாக உள்ளன.

இதே வகையான சிந்தனைப் போக்கில், பேராசிரியர் பி. எம். பருவா (B. M. Barua), சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்துள்ளார். தாந்திரிக நூல்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றைப் படிக்க முயன்றுள்ளார். 'பசுபதி' முத்திரையில் உள்ள குறியீடுகளை "அஜப உபாசா" என்று இவர் கொண்டுள்ளார். இத்தொடர், சம்ஸ்கிருத மொழித் தொடரான "அச்சல உபாசியா" என்பதன் தொன்மை வடிவம் என்று குறிப்பிடுகிறார். இதற்கு "இந்த மலை ஒருவரை வழிபட்டது" என்று இவர் பொருள் கூறியுள்ளார்.[24] இதே அடிப்படையில் ஆர். எம். நாத் என்பவர் சிந்துவெளி எழுத்துகளை விளக்க முயன்றுள்ளார். குறியீடு b = ப எனவும், மற்றும் பகா (Baga) எனவும், குறியீடு c = க எனவும், Cha = B எனவும் இவர் கொண்டுள்ளார். இவ்வாறு கொள்ளுவதற்குரிய காரணங்களை இவர் குறிப்பிட வில்லை. மற்றும் தாந்திரிக நூல்களின் பின்னணியில் விளக்க முயலுவதால், சுவாமி சங்கரானானந்தருக்கு உண்டான இடர்ப்பாடுகளில் இவருடைய ஆய்வும் சிக்கிக் கொள்ளுகிறது.

பழந்திராவிட எழுத்துகள்

சிந்துவெளி எழுத்து ஆராய்ச்சியில் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தவர் திருத்தந்தை ஹீராசுப் பாதிரியார் ஆவார். பழந்திராவிட மொழியின் எழுத்துகளாக இவற்றை முதன் முதல் கண்டறிந்த பெருமை இவருக்கே யுரியதாகும். இவருடைய ஆய்வினைச் "சிந்துவெளி எழுத்துகளும் பழந்திராவிட மொழியும்" எனும் தலைப்பில் விரிவாகக் காணலாம்.

பிரிட்டானியத் தொல்லியல் அறிஞர்களான சர் மார்ட்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler), லியோனார்ட்டு உல்லி (Leonard Wolley), ஸ்டுவர்ட் பிக்கட் (Stuart Piggott) என்பவர்களும், இவர்களுடைய மாணவர்களும் "சிந்துவெளி நாகரிகம் ஆரியர்களாலேயே அழிக்கப்பட்டது; அவர்களுக்கு முன்பு அங்கு வாழ்ந்த மக்கள் ஆரியர் அல்லாத இந்தியப் பழங்குடி மக்களாவர்" எனும் முடிவிற்கு வந்துள்ளனர்.[25]

## இயல் 4

# பிராமி எழுத்தின் தாய்

1957 இல் கே. என். சாஸ்திரி என்பவர் "சிந்துவெளி நாகரிகத்திற்குப் புதிய ஒளி" எனும் ஆய்வுரையில், சிந்துவெளி எழுத்துகளுக்கும் பிராமி எழுத்துகளுக்கும் இடையேயுள்ள ஒப்புமைப் பண்புகளைத் தக்க சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார். ஆனால், "ரோஸட்டா கல் (Rosetta Stone)லைப் போன்ற இரு மொழிக் கல்வெட்டுகள் இங்குக் கிடைக்கும் வரை, சிந்துவெளி எழுத்துகள் பெரும்புதிராகவே இருந்துவரும்[26]" என்று இவர் தெரிவித்துள்ளார். சிந்துவெளி குறியீடுகளை இவர் பகுத்துப் பகுத்து

ஆராய்ந்ததன் பயனாக, அடிப்படைக் குறியீடுகளான எழுத்துகள் 56 என்று வரையறுத்துள்ளார். இதனைச் சிறப்புமிகு சாதனையாகப் போற்றுவர். இன்றைய இந்திய மொழிகளுள் பெரும்பாலானவற்றின் எழுத்துகள் 56 ஆக இருப்பதை இங்கு நினைவுகூர்தல் வேண்டும்.[26]

## வலமிருந்து இடமாக அமைந்த எழுத்துகள்

சிந்துவெளி எழுத்துகள் வலப்பக்கத்தில் இருந்து இடப் பக்கமாக எழுதப் பட்டுள்ளன எனும் கருத்தினைச் சில அறிஞர்கள் மெய்ப்பிக்க முயன்றுள்ளதை நாம் முன்னரே கண்டோம். இதனை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் டைரக்டர் ஜெனரலாக இருந்த பி.பி. லால் (B.B.Lal) தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார்; காளிபங் கனில் (இராஜஸ்தானில் உள்ள ஊர்) கண்டெடுக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகள் இரண்டில் காணப்படும் மட்கலக் குறியீட்டைக் (Graffiti) கொண்டு, அவை எவ்வாறு வல மிருந்து இடப்பக்கமாக எழுதப்பட்டுள்ளன என்பதை நிறுவியுள்ளார்.[27]

## பிராகிருதமொழி எழுத்துகள்

சுதங்குஷ் குமார் ராஜ் என்பவர் 1964 இல், "சிந்து வெளி எழுத்துகள் ஒருவகை பிராகிருத மொழியின் எழுத்து களாகும். சிந்துவெளி எழுத்துகளின் வடிவங்கள் திரிந்தும் திரிக்கப்பட்டும் எளிமை யாக்கப்பட்ட நிலையில், 'பிராமி' எழுத்துகள் தோன்றியுள்ளன. இவை யாவும் சிந்துவெளி எழுத்துகளின் வழிவந்தவை; சம்ஸ்கிருதம் அல்லாத பிரா கிருத மொழிக்குரிய எழுத்துவடிவமாக அமைக்கப் பட்டவை"[28] என்று தம் ஆராய்ச்சி முடிவினை இவர் அறிவித்துள்ளார்.

## வேத, புராண காலப் பெயர்கள்

பேராசிரியர் வங்கபிகாரி சக்கரவர்த்தி (Bankabehari-Chakravarti), சிந்துவெளி எழுத்துகளை நுட்பமாக

ஆராய்ந்து இருநூல்களை வெளியிட்டுள்ளார்.[29] இவர் 511 முத்திரைகளில் உள்ள குறியீடுகளை ஆராய்ந்து அறிந்து (1975 - 76), அவற்றின் ஒலிப்பு முறையையும், அவற்றால் தெரியவரும் மொழியையும் கண்டுபிடித்து விட்டதாகத் தெரிவித்துள்ளார். கொச்சை சம்ஸ்கிருதமே சிந்துவெளி யில் பயன் படுத்தப்பட்டுள்ள மொழி என்பது இவருடைய துணிவு. வாணிகர்களின் பெயர்களும் புராண காலத்திற் குரிய அரச குமாரர்களின் பெயர்களும் சிந்துவெளிக் குறியீடுகளில் காணப்படுவதாக இவர் தெரிவித்துள்ளார். இவருடைய கண்டு பிடிப்பின்படி பல பெயர்களுக்கு முன்னால் 'ஸ்ரீ', 'ராஜா' எனும் மதிப்பினைப் புலப்படுத்தும் அடைகள் வழங்கப் பட்டதாகத் தெரிகிறது. இதைவிட வியப்பிற்குரிய மற்றொரு செய்தி, சிந்துவெளி முத்திரை களில் 'சனகன்', 'கோசிதன்' எனும் சிறப்பு வாய்ந்த பண்டை அரசர்களின் பெயர்களைக் காண்பதாக இவர் குறிப்பிட் டுள்ளமையாகும்.[30] இவருடைய ஆய்வுமுறை முன்கூட்டியே சில கருத்துகளை மனத்தில் கொண்டு, அவற்றை அந்தக் கல்லெழுத்துகளில் காண முயன்றதாகவே அமைந்துள்ளது.

மராட்டிய அறிஞரான எஸ். கே. கோலேகாங்க (S. K. Golegaonkar) ரின் ஆராய்ச்சியும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். ஆறு உயிரெழுத்துகளும் பதினான்கு மெய் யெழுத்துகளும் சிந்துவெளி எழுத்துகளில் காணப்படுவதாக இவர் கணக்கிட்டுள்ளார். நானூறு முத்திரைகளில் உள்ள எழுத்துகளை இனம் கண்டுகொண்டதாக இவர் கூறுகிறார். இந்த எழுத்துகளைக்கொண்டு வேத, புராண காலப் பெரி யார்கள் பலருடைய பெயர்களை இவர் சிந்துவெளி மக் களுக்கு உரியனவாக முடிவு செய்துள்ளார்.[31]

திருவாளர் சிகரபுர அரங்கநாத ராவ் (S.R. Rao) எனும் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை அறிஞரின் சிந்து வெளி எழுத்துகள் பற்றிய ஆய்வு, நம்முடைய சிந்தை யைக் கவருவதாகும். இவர் சிந்துவெளிப் பண்பாட்டின்

சின்னங்கள் ஐம்பதினை அகழ்ந்தெடுத்துள்ளார். மற்றும், மொகஞ்சொதாரோ சின்னத்தை முதன்முதல் கண்டு பிடித்த ஆர். டி. பானர்ஜியின் கீழ், கள ஆய்வுப் பணியில் பயிற்சி பெற்ற சிறப்பு திரு. ராவிற்கு உரியதாகும்.

''சிந்துவெளி முத்திரைகள் வாணிகத்திற்காகப் பயன் படுத்தப் பட்டனவாகும். அவை சமயச் சார்புடைய தாயத்துகளும் அல்ல; அழகிற்காக அணிந்து கொள்ளப் பட்ட அணிகலன்களும் அல்ல'' என்பது இவருடைய துணி வாகும். லோதல் (Lothal) எனும் சிந்துவெளிப் பண்பாட்டுச் சின்னத்தில், இம்முடிவிற்கு வருவதற்குரிய சான்றுகள் பல கிடைத்துள்ளன என்று இவர் அறிவித்துள்ளார்.[32]

மேலும், வேதகால ஆரியர்களின் மூதாதையரே சிந்து வெளி மக்கள் என்பது இவருடைய நம்பிக்கை. ''பக (ன்), தாரக(ன்),அஷ்டக(ன்),பஞ்சக(ன்),பை(ன்),கர(ன்),அப(ன்), திரிக (ன்), அப்த (ன்), மன (ன்), தாச (ன்) எனும் பெயர்கள் சிந்துவெளி நாகரிகச் சின்னங்களில் கிடைத்துள்ள எழுத்து வடிவங்களால் தெரியவருகின்றன. இவை அரசர்களை யும் குறுநிலத் தலைவர்களையும் சுட்டுவனவாகும். இப் பெயர்கள் வேதகால தெய்வங்களுக்கும், முனிவர்களுக்கும் அசுரர்களுக்கும் வழங்கிய பெயர்களாகும் என்பர். ''மல்லக, மெலூகா, சப்தஅபாத, சப்தசிந்து, ஒட்டர எனும் பெயர்கள் வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் நாடுகளையும் குறிப்பனவாகும். ஏக(ம்), பஞ்சக (ம்), சப்தக (ம்) என்னும் பெயர்கள் பல்வேறு வகையான யாகங்களைச் சுட்டுகின்றன. மற்றும் க, ல, ஹ, சக்தி எனும் ஓரசைச் சொற்கள் தெய்வங் களின் பெயர்களாகத் தோன்றுகின்றன. இவை யாவற் றையும் ஒருங்கிணைத்து நோக்குகின்ற பொழுது, சிந்து வெளி நாகரிகத்திற்குரிய மக்கள் வேதகால ஆரியரின் மூதா தையர் எனும் முடிவிற்கு வருவதே பொருத்தமாகத் தோன்றுகிறது''[33] என்று 1973 - 74 அளவில் திரு. ராவ் அறி வுறுத்தியுள்ளார்.

இவருடைய கருத்துப்படி சிந்துவெளி எழுத்துகள் யாவும் ஒலியியல் அடிப்படையில் அமைக்கப்பட்ட எழுத்து களாகும்; சித்திர எழுத்துகளிலிருந்து ஒலிவடிவ எழுத்துகள் அமைத்துக் கொள்ளப்பட்ட காலகட்டத்திற்கு இவை உரியனவாம். மூன்றே உயிர் எழுத்துகள் தான் சிந்துவெளி எழுத்துகளில் இடம் பெற்றுள்ளனவாம். இதே வகையான எழுத்துகள், ஒத்த ஒலி மதிப்புடன் எருசலேம் நகருக்கு அருகிலும், சினாய் தீபகற்பத்திலும் செமிடிக் மொழியில் பயன்படுத்தப் பட்டுள்ளனவாம்.

திரு. ராவ் அவர்கள், சிந்துவெளி எழுத்துகள் கி. மு. 2000 - 1900க்கும் இடையே சிந்துவெளி மக்களால் உருவாக் கப்பட்டன என்பர். இந்த எழுத்துகளை செமிடிக் இன மக்கள் கி. மு. 1600 - 1500க்கும் இடையில் இங்கிருந்து கடன்வாங்கிக் கொண்டனராம். இவற்றோடு புதிய உயிர் எழுத்துகளைச் சேர்த்து, கிரேக்கர்கள் தங்கள் நெடுங் கணக்கினை அமைத்துக் கொண்டதாகவும் திரு. ராவ் தெரிவித்துள்ளார்.[34] மற்றும், இவர்களுடைய கடன் வாங் கலுக்குக் காரணம், சிந்துவெளி மொழி இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாக இருந்தமையே யாகும் என்பர்.

திரு. ஐராவதம் மகாதேவன் மொழியியல், எழுத் தியல், பண்பாட்டியல் சான்றுகளைக் கொண்டு இவரு டைய கருத்துகளை மறுத்துள்ளார். 'திரு. ராவின் முடிவுகள் வியப்பு கலந்த அதிர்ச்சி யூட்டுவனவாக உள்ளன. சிந்துவெளிக் குறியீடுகள் பயிலப்படும் நிகழ்வு நிலையைத், தற்சார்பற்ற முறையில் பகுத்தாராயாமல் செய்யப்பட்ட ஆய்வினால் வெளிப்பட்ட முடிவுகளாகவே இவை தோன்று கின்றன'' என்பது திரு. ஐராவதம் மகாதேவன் அவர் களுடைய கருத்தாகும். "திரு. ராவினுடைய ஆராய்ச்சி முறையில் குறை இல்லை. ஆனால், சிந்துவெளிக் குறியீடுகள் ஒலிவடிவ எழுத்துகள்; அசைகளால் அமைந்தவை;

அந்த எழுத்துகளால் அறியப்படும் மொழி வேதமொழியோடு தொடர்புடையது எனும் அவருடைய முடிவுகள், எதிர்கால ஆராய்ச்சிகளால் புலனாகக் கூடிய உண்மைகளுக்கு முன்னால் நிலைத்து நிற்க இயலாது'' என்று நயமாகத் திரு. மகாதேவன் மறுத்துள்ளமை இங்கு நினைவு கூர்தற்குரியதாகும்[35].

சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழித் தொடர்புடையவை எனும் கருத்தினைக் கடந்த பதினைந்து ஆண்டுக்கால ஆராய்ச்சியின் பயனாகப் பின்னிஷ் மொழியாளரும், ருஷிய நாட்டு அறிஞர்களும், தமிழ்நாட்டு அறிஞர் ஒருவரும் கண்டுள்ளனர். இந்த ஆராய்ச்சியின் நோக்கையும் போக்கையும் விரிவாக அடுத்து வரும் பகுதியில் காண்போம்.

இதுவரை நாம் கண்ட பல்வேறு அறிஞர்களின் கருத்துகளைத் தொகைவகைப் படுத்துகின்ற பொழுது, மூன்று உண்மைகள் புலனாகின்றன. தொடக்க காலத்திய மேற்கு நாட்டு ஆராய்ச்சியாளர்களுள் ஓரிருவரைத் தவிர, மற்றவர்கள் யாவரும் "சிந்துவெளி எழுத்துகள் ஆரியருக்கு முற்பட்ட - சம்ஸ்கிருத மொழியோடு தொடர்பு இல்லாத ஒரு மொழிக்கு உரியன'' என்று துணிந்துள்ளனர். இந்த எழுத்துகளின் வரிவடிவங்களில் இருந்தே, அசோகன் காலத்திய பிராமி எழுத்துகள் திரிந்து வளர்ந்து இருக்க வேண்டும் என்றும் இவர்கள் கருதுகின்றனர். 1935க்குப் பிறகு ஒரு சில ஐரோப்பியரும், இந்திய (வட இந்திய) அறிஞர்களுள் பலரும் சிந்துவெளி எழுத்துகள் சம்ஸ்கிருத மொழியின் மூதாதையான ஆரிய மொழி ஒன்றிற்குரியனவாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளனர்.

இவ்விரண்டு கருத்திற்கும் இடைப்பட்ட நிலையில், சிந்துவெளி எழுத்துகள் தமிழின் மூல மொழியான பழந்திராவிட மொழிக்குரியவை எனும் கருத்தினை நிலைநாட்ட ஐரோப்பிய அறிஞர் சிலரும் தமிழக அறிஞர் ஒருவரும் முயன்று வருகின்றனர்.

இயல் 5

# திராவிட மொழிகளின் தொல்பழங்கால எழுத்து வடிவம்

சிந்துவெளி எழுத்துகளை ஓயாது ஆராய்ந்து, உண்மை காண முயன்றவர்கள் - முயன்று வருபவர்கள் பலராவர். அவர்களுள் சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழிச் சார்புடையன என்பதை முதன்முதல் கண்டு உலகிற்கு உணர்த்தியவர் திருத்தந்தை ஹீராசுப் பாதிரியாவார். அவருக்குப் பிறகு இருபதாண்டுகள் கழித்து, கணிப்பான் (Computer) உதவியினால் பின்லாந்து நாட்டு அறிஞர்களும் ருஷிய நாட்டு ஆராய்ச்சியாளர்களும் சிற்சில புதுமைப் போக்குகளுடன்"சிந்துவெளி எழுத்துகள் பழந்திராவிட மொழிக்குரியவை" என்பதை நிலை நாட்டியுள்ளனர். இவ்வாய்வாளர்களின் ஆராய்ச்சி முறையையும் அவ்வெழுத்துகளின் வரிவடிவைப் படித்த முறையையும் இப்பொழுது காண்போம்.

## ஹீராசுப் பாதிரியாரும் சிந்துவெளி எழுத்துகளும்

'ஸ்பெயின் நாட்டுத்திராவிடன்' என்று தம்மை, இந்த நாட்டு மக்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டவர் திருத்தந்தை ஹீராசுப் பெருந்தகை. முப்பது ஆண்டுகள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு, பல்வேறு ஆய்வுரைகளை அவர் எழுதியுள்ளார். அவற்றிற்கு எல்லாம் முடிமணியாக விளங்குவது 1953 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "பழைய இந்திய - நடுநிலக் கடற்பண்பாடு: ஓர் ஆய்வு" (Studies in proto - Indian Mediterranean Culture, Vol. I) எனும் நூலாகும். அவர் கண்டறிந்த உண்மைகளாவன:

1. மொகஞ்சொதாரோ, ஹாரப்பாவில் உள்ள தொல்பொருள் சின்னங்கள் ஆரியருக்கு முற்பட்டவை.
2. அங்கு வாழ்ந்தவர்கள் திராவிடர்கள்.
3. அந்த மக்கள் திராவிட மொழிகளையே பேசினர்.
4. அந்த மொழிகளின் இலக்கணம் நன்கு வளர்ச்சி அடையவில்லை,
5. எழுத்துகள் சித்திர ஒலிவடிவம் உடையன.
6. குறியீடுகள் முழுமையான சொற்களாக உள்ளன.
7. குறியீடுகள் பெயர்களாக அமையவில்லை; அவை கருத்துரைகள், விளக்கங்கள் ஆக உள்ளன; பொதுவாக மொழியின் சிறப்புமிகு கூறுகளாக உள்ளன.[36]

இவற்றைக் கண்டறிவதற்கு அவர் பின்பற்றியுள்ள நெறிமுறைகளுள் முக்கியமானது, அக்குறியீடுகளை நான்கு வகையாகப் பாகுபடுத்திக் கொண்டமையாகும். அவை (1) சித்திர எழுத்துகள் (Pictograph), (2) ஒலிவடிவக் குறிகள் (Phonetic Signs), (3) கூட்டுக் குறிகள், (4) ஒலிவடிவ இணைப்புக் குறிகள் என்பன. இந்த அடிப்படையில் அவர் சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்த பொழுது, பழைய தமிழ் மொழியையே அவற்றில் கண்டுள்ளார்.




எனும் எழுத்தும்

எனும் குறியீடும் மழையைக் குறிப்பன.

இக்குறி ஒலிவடிவும் 'முகிலைக்'

குறிப்பது என்பது ஹீராசின் துணிவாகும். இதைப் போன்றே,



படம் 4

என்னும் குறியீட்டை,

"கோயில் எல்லா கடவுள் அது ஆன்" என்று படித்து, "கோயிலில் உள்ள தெய்வங்கள் அனைத்திற்கும் தலைவன்" என்று இத்தொடருக்கு அவர் பொருள் கூறியுள்ளார்[37].



படம் 5

என்னும் குறியீட்டைத் "திரையர் அது" என்று அவர் படித்துள்ளார்.[38]

மற்றும் "சிந்துவெளியில் கிடைத்துள்ள சில எழுத்துக் குறிகள் முகில், மூன்(று)கண், மூன்(று)மீன்கள், பேராஸ்(ள்) எண்ணாள், நாய், வேல், நண்டூர், வேலூர், குரங்கர், மீனவர் முதலிய சொற்களைக் குறிப்பதாகவும் அவர்

கருதுகிறார். பேராள், எண்ணாள், மூன்(று)கண் என்பன சிவனைச் சுட்டுவதாக அவர் கொண்டுள்ளார்[39].




படம் 6

தவத்திரு ஹீராசுப் பாதிரியார் சித்திர எழுத்துகளுக்குப் பொருள் கொண்டுள்ள முறையினைப் பின்வரும் காட்டுகள் சிலவற்றால் தெளியலாம்.

இதைப்போன்று பல்வேறு குறியீடுகளுக்குப் பல்வேறு பொருள் கொள்ளுவதோடு, பண்டை உலக மொழிகளுள் அவற்றிற்கு ஈடான ஒலி யாது என்பதையும் இப்பாதிரியார் விரிவாக விளக்கியுள்ளார்.

சிந்துவெளி எழுத்துகளைக் கொண்ட மொழி, பழைய திராவிட (Proto - Dravidian) மொழியாகும். அம்மொழி யின் பெரும்பாலான சொற்கள் தமிழிலேயே காணப்படு கின்றன. ஆயினும், அவற்றுள் சில, கன்னடம், துளுவம் போன்ற திராவிட மொழிகளிலும் உள்ளன. சிந்துவெளியில் வழங்கிய திராவிட மொழி, இன்று பேசப்படுகின்ற திராவிட மொழிகளைப் போன்றது அன்று. இவற்றின் மூலமான பழந்திராவிட மொழியென அதைச் சுட்டலாம். அது பழந் தமிழோடும், கன்னடத்தோடும் பெரிதும் ஒப்புமை யுடைய தாகும் என்று அவர் துணிந்துள்ளார்.[40] கடல் கொண்ட தமிழகத்திலிருந்து புறப்பட்டு, வடமேற்கு இந்தியாவில் தங்கிச் சிந்துவெளி நாகரிகத்தைத் திராவிடர்கள் வளர்த் தனர். அவர்களுள் ஒரு பகுதியினர், நடுநிலக் கடற் பகுதிகளில் குடியேறிப் பண்டை நாகரிகங்கள் பலவற்றை வளர்த்தனர் என்பது ஹீராசின் கருத்தாகும்.

இந்திய மொழியியல் அறிஞரான டாக்டர் சுநித குமார சாட்டர்ஜி "தாமாகச் சில கருதுகோளைக் கொண்டு, மொகஞ்சொதாரோவின் முத்திரைகளில் கி. பி. 500க்குரிய செந்தமிழ்ச் சொற்களைக் கண்டுவருவது திருத்தந்தை ஹீராசு அவர்களின் முயற்சியாக உள்ளது. இம்முறையில் சிறப்புமிகு மொழிநூல் ஆராய்ச்சிக்கு இடமில்லாமல் போகிறது"[41] என்று மொழிந்துள்ளார். இந்தக் குற்றச் சாட்டை ஹீராசுப் பெருந்தகை ஒப்புக்கொண்டு, "ஆமாம் உண்மைதான்; நான் செந்தமிழ்ச் சொற்களையே படித்துக் காட்டுவது உண்மை. ஆனால், நான் என்ன செய்வது? பழந்திராவிட மொழியின் சொற்கள் இன்றைய தமிழ் மொழியின் சொற்களில் இருந்து, பெரிதும் வேறுபட

வில்லையே! இது திராவிட மொழியின் பழமைப்பற்று இயல்பைக் காட்டுகிறது. இதற்கு நான் என்ன செய்வது?"[42] என்று தம் முடிவின் மெய்ம்மையை நிலைநாட்ட அவர் முயன்றுள்ளார்.

ருஷிய ஆய்வாளர் கண்ட சிந்துவெளி எழுத்துகள்

சிந்துவெளி எழுத்துகளின் வரிவடிவத்தை ஆராய்வதில் 1965 அளவில், ருஷிய நாட்டு அறிஞர்கள் ஆர்வம் கொண்டனர். அவர்கள் திருத்தந்தை ஹீராசுப் பெருந்தகையின் அடிச்சுவட்டைப் பின்பற்றியுள்ளனர். ருஷிய சிந்துவெளி எழுத்தாய்வுக் குழுவிற்கு மானிட இயல்நூல் வல்லுநரான பேராசிரியர் யூ. நார்சோ (Yu. Knorsov) தலைவராவார். அவருடன் லெனின் கிராட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பி. ய. வோல்சோக் (B. Ya. Volcok) கும்., என். வி. குரோவும் (N. Gurov) சேர்ந்து இவ்வாய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இக்குழு அல்லாமல், வேரு இரு ருஷிய அறிஞர் குழுவும் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

முதலில், குறிப்பிட்ட சில குறியீடுகளையே இவர்கள் ஆராய்ந்தனர். ஆனால் சிந்துவெளி மக்களின் சமுதாயம், சமயம் பற்றிய பல பொதுப்படையான சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்குரிய கருத்துகளை இவர்கள் தெரிவித்துள்ளனர்; ஒவ்வொரு குறியீடும் ஒவ்வொரு சொல்லை உணர்த்துவது எனும் முடிவிற்கு வந்துள்ளனர். முத்திரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தாயத்து என்றும், அவை தெய்வங்களுக்குப் படைக்கப்பட்டன என்றும் இவர்கள் கருதுகின்றனர். காஸ்பியன் கடற்பகுதியிலிருந்து சிந்துவெளிப் பகுதிக்குக் குடியேறிய திராவிடர்களே, சிந்துவெளி நாகரிகத்தைப் படைத்தவர்கள் என்பது என். வி. குரோவின் கருத்தாகும்.[43] ஒன்பது கோள்களைப்பற்றிய ஒருவகை விண்வெளி இயக்க அறிவு, இந்திய மண்ணில் கி. மு. 2000த்திற்கும் ஆயிரத்திற்கும் இடையில் நன்கு

வளர்ந்திருந்தமை புலனாகின்றது. பிற்காலத்தில் இந்தியா விற்குள் வெற்றிநடை போட்ட ஆரியர்கள், திராவிடப் பழங்குடி மக்களிடத்திருந்து, இவற்றைக் கற்றிருக்க வேண்டும். இதன் எச்சமிச்சத்தை, இன்று தென்னிந் தியாவில் வழக்கில் உள்ள 'ஒன்பது கோள்' (நவகிரக) வழி பாட்டில் காணுகின்றோம் என்று இவர் குறிப்பிடுகிறார்.[44]

அடுத்து, இவர்கள் 1968 இல் வெளியிட்ட அறிக்கையி லிருந்து ருஷிய ஆராய்ச்சியாளர் சிந்துவெளி எழுத்துகள் சித்திர எழுத்துகள் எனும் முடிவிற்கு வந்துள்ளமை புலனா கின்றது. ஆனால், அவை பெரிதும் மரபுவழிப்பட்ட பொரு ளை யுணர்த்துகின்றன என்பர். முத்திரைகளில் உள்ள குறி யீடுகள் இந்திய விலங்குகளையும், இந்தியத் தொன்மை யத்தையும் (Mythology), இந்தியப் படிமக்கலை (Iconography) வளர்ச்சியையும் தெரிந்து கொள்ளப் பெரிதும் பயன்படும் என்று இவர்கள் கூறுகின்றனர்.

எழுத்துகளின் அமைப்பு ஆய்வினைக் கணிப்பான் மூலம் ருஷிய அறிஞர்கள் செய்தனர். வேர்ச் சொற்களின் அடி யினை இவ்வாய்வின் மூலம் இவர்கள் எளிதில் கண்டறிந் தனர். விகுதிகள் திணை, பால், எண், இடம் உணர்த்தும் பொழுது வேறுபடும் முறைகளை நுட்பமாக ஆராய்ந் துள்ளனர். பெரிதும் ஆண்பால் விகுதிக் கூறுகளையும், இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையி லுள்ள வேற்றுமைகளின் உருபுகளையும், சிறப்பாக நான் காம் வேற்றுமை உருபினையும் வேறுபடுத்திக் காண்பதில் இவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். சொற்றொடர்க் கூறு களுள் பெயரெச்ச வினையெச்சங்களையும், அடைகளை யும் இவர்கள் பிரித்தறிந்தனர். இவ்வாய்வினால், ஒட்டு நிலையில் உள்ள திராவிட மொழி அமைப்புடைய ஒரு மொழியே, சிந்துவெளியில் வழங்கிய மொழியாக இருக்க வேண்டும் எனும் முடிவிற்கு ருஷிய அறிஞர்கள் வந்துள் ளனர்.[45]

தொடர்ந்து இவர்கள் சிந்துவெளி ஆராய்ச்சியில் ஈடு பட்டு வந்ததன் விளைவாகச் சில புதிய உண்மைகளை, 1980 ஆம் ஆண்டு, மார்ச்சு மாத இறுதியில் உலகிற்கு உணர்த்தியுள்ளனர். இச்செய்தி சோவியததின் ''இஸ்வெசுதா'' இதழில் ஏப்ரல் மாதத்தில் வெளிவந்துள்ளது.

தமிழ், மலையாளம் அல்லது கன்னடம் எனும் மொழிகளோடு தொடர்புடைய ஒரு திராவிட மொழியைப் போல் சிந்துவெளி எழுத்துகளின் வரிவடிவம் அமைந்துள்ளதென்று இவர்கள் அறிவித்துள்ளனர். இக் கண்டுபிடிப்பு, சிந்துவெளி எழுத்து ஆராய்ச்சியில் புதியதொரு திருப்புமையமாக அமையும் என்று அவர்கள் நம்புகின்றனர். ஏறக்குறைய கி.மு. 2500 ஆம் ஆண்டளவில் சிந்துவெளி எழுத்துமுறை நன்கு வளர்ச்சி யுற்றிருந்தது என்றும், இந்தச் சிந்துவெளி நாகரிக எழுத்துமுறை அங்கேயே உருவானது என்றும், அதற்கெனத் தனித்தன்மை உள்ளது என்றும், வேறெந்த நாட்டிலிருந்தும் அந்த எழுத்துமுறை சிந்து வெளிக்குக் கொண்டுவரப் படவில்லை என்றும் ருஷிய அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்கு ஆசியாவில் தோன்றிய சுமேரிய நாகரிகத்து எழுத்து முறையோடோ, எகிப்திய சித்திர எழுத்துகளோடோ இந்த எழுத்துமுறை தொடர்புடையதாகத் தோன்றவில்லை என்று இவர்கள் அறிவித்துள்ளனர். இவ்வடிப்படையில் சிந்துவெளி எழுத்துமுறையோடு மேற்காசியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள 800 முத்திரைகளில் உள்ள சிந்துவெளி எழுத்துமுறை, இவ்விரு நாகரிகங்களுக்கும் இடையே பேரளவில் வாணிகத் தொடர்பு இருந்தமைக்குச் சிறப்புமிக்க சான்றாக விளங்குகிறது என்பர்.

அணிமையில் கண்டுபிடிக்கப் பட்ட பல புதிய செய்திகள் அனைத்தும், கணிப்பானைக் கொண்டு செய்யப்பட்ட ஆராய்ச்சியின் பயனாகும். இக்கண்டுபிடிப்பில் பேராசிரி

யரி நார்சோ (Knorsov)வும், அவருடைய குழுவினரும் பேரீடுபாடு காட்டி வருகின்றனர். கணிப்பானைப் பயன் படுத்தும் இக்குழுவினரால், சிந்துவெளி எழுத்துகளின் சில பகுதிகளைத் தவிர, மற்ற எல்லா வகையான மூலப்பகுதி களையும் எளிதில் படிக்க இயலுகிறது.

சந்திரன், சூரியன், செவ்வாய் ஆகிய கோள்களின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிந்துவெளி மக்கள், காலத்தைக் கணக்கிட்டனர் என்பதை இவர்கள் கண்டறிந்துள்ளனர். கி.மு. மூவாயிரம் ஆண்டு அளவி லேயே சூரியனைச் சுற்றிவர, செவ்வாய் எவ்வளவு காலத்தை எடுத்துக் கொண்டது என்பதைச் சிந்துவெளி மக்கள் கணக்கிடத் தெரிந்திருந்தனர் என்பது இவர்களு டைய சிறப்புமிகு கண்டுபிடிப்பாகும்.[46]

ருஷியநாட்டு அறிஞர்களின் சிந்துவெளி எழுத்துகள் பற்றிய வளர்ந்துவரும் ஆராய்ச்சி, வருங்காலத்தில் 'சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழிக்குரியன' எனும் கருத்திற்கு வலிவும் பொலிவும் வழங்குமெனத் தெரிகிறது.

பின்னிஷ் மொழி அறிஞரின் ஆராய்ச்சி

பின்லாந்து நாட்டில் கடந்த பதினைந்து ஆண்டு களாகச் சிந்துவெளி எழுத்துகள் பற்றிய ஆராய்ச்சி மிகத் தீவிரமாகச் செய்யப்பட்டு வருகிறது. அங்கு சிமோ பர்போலா (Simo Parpola), அஸ்கோ பர்போலா (Asko Parpola) எனும் இரு சகோதரர்களின் குன்றா ஆர்வத்தால் இவ்வாராய்ச்சி, வெற்றி மேல் வெற்றி பெற்று வருகிறது. கோபன்ஹேகனில் உள்ள ஸ்காண்டிநேவிய - ஆசிய ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் இவ்விரு சகோதரர்களும், கணித வல்லுநர் ஒருவரும் கணிப்பான் தொழில் நுட்பக் கலைஞரும் சேர்ந்து இவ்வாராய்ச்சியினை அயராது செய்து வருகின்றனர். இதன் விளைவாக 1969ன் இறுதி

யில், "சிந்துவெளி எழுத்துகளின் வரிவடிவ ஆராய்ச்சியின் நிலை" எனும் கூட்டறிக்கையை இவர்கள் வெளியிட்டனர். [47] பிறகு 1973இல் "சிந்துவெளி எழுத்து ஆராய்ச்சிக்குரிய மூலப் பொருள்கள் தொகுதி - சிந்துவெளி கல்வெட்டுகளின் விளக்கப் பட்டியல்" எனும் நூலையும் இவர்கள் வெளியிட்டுள்ளனர்.[48] இவற்றோடு சில அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றிலிருந்து, இவர்களுடைய ஆராய்ச்சியால் தெரிய வரும் புதிய உண்மைகளை எளிதில் அறிய இயலுகிறது. முதலில் இவர்கள் சித்திரக் குறியீடுகள் முழுச்சொற்களை உணர்த்துவனவாகக் கருதினர். இதனால், சிந்துவெளி எழுத்துகளின் வரிவடிவம் சொல் எழுத்துமுறை (Logo graphic) யைச் சார்ந்தது[49] என்று நம்பினர். ஆனால், பிறகு இந்தக் கருத்தை இவர்கள் மாற்றிக் கொண்டனர். கூட்டு வடிவக் குறியீடுகளில் உள்ள சில குறிகள், அசைகளாகவும், எழுத்துகளாகவும் உள்ளன என்பதை இவர்கள் கண்டு அறிந்தனர். எனவே, இந்த எழுத்துமுறையைச் 'சொல் - அசை முறை' (Logo Syllabic) எனச் சுட்டலாயினர். இக் குறியீடுகளின் சிறப்பினையும் பொருளினையும் அறிவதற்கு, அவற்றுள் ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்த்து ஆராய்ந்தனர்; அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள சின்னங்கள் பலவற்றோடு ஒப்பிட்டனர்; வழக்கிறந்த பண்டை உலகின் சுமேரிய எகிப்திய, ஹிட்டைட்டிய, சீன எழுத்துக் குறியீட்டுப் பட்டியலோடு இவற்றை ஒப்பிட்டுப் பார்த்துள்ளனர்.

தனிப்பட்ட வகையில் இவர்கள் செய்த ஆராய்ச்சியின் விளைவாக வலமிருந்து இடமாக இந்த எழுத்துமுறை அமைந்து இருப்பதைக் கண்டனர்[50]. இந்த எழுத்துமுறை ஒரு பகுதி அசைமுறையாகவும் பிறபகுதிகள் குறியீடாகவும் உள்ளனவாம்.



படம் 1 2 3 4

1 எனும் குறியீட்டைக் 'கோயில்' என்று இவர்கள் கொண்டுள்ளனர். இதனைப் பகுக்கின்ற பொழுது மேலே உள்ளதைக் கோ (கடவுள்) எனவும் 2ல் உள்ளதை இல (இலவம்பூ) எனவும் கொண்டுஇவர்கள் பொருள் விளக்கம் தந்துள்ளனர். இவ்விரு குறிகளும் இணைந்து கூட்டுவடிவம் அமைகின்ற பொழுது, இதனைக் 'கோயிலா' எனக்கொள்ளாமல், இறுதி ஒலிக்கூறான அகரத்தை நீக்கிவிட்டு,'கோயில்'என்று கொண்டுள்ளனர். இதைப் போன்றே, 3 எனும் குறியீட்டைக் 'கோட்டை' என்று இவர்கள் படித்துள்ளனர். 3ன் மேலுள்ள குறியீட்டைக் 'கோ' என்னும் எழுத்தையும் 4 எனும் குறியிட்டை 'அட்டை' (மேல் அறை, கோபுரம்), அல்லது 'அடை'(குறுக்கே)என்னும் அசையெழுத்தாகவும் இவர்கள் கொண்டுள்ளனர்.

குறியீடுகள் எப்பொருளை உணர்த்துகின்றன என்பதைத் துணிவதில் சிற்சில வேற்றுமைகள் இவர்களுக்கும், ருஷிய ஆராய்ச்சியாளர்களுக்கும் இடையே காணப்படுகின்றன. வரி வடிவப் பொறிப்பினைக் காண்க.



இவற்றுள் இறுதியில் உள்ள நான்கு குறிகளும் 'செம் மீனுடைய (சிவன்) கோயிலைச்' சுட்டுவதாகப் பின்னிஷ் அறிஞர் கொண்டுள்ளனர். எஞ்சியுள்ள குறிகள் அரசு சார்ந்த பட்டங்களாக இருக்கக் கூடும் எனக் கருதுகின்றனர். இவற்றுள் 6ஐ பட்டைத்தச் சுட்டும் என்பர். இக்குறியீட்டை, வேறோர் இடத்தில் குயவன் மண்பாண்டம் செய்யும் சக்கரமாக இவர்கள் கொண்டுள்ளனர். பிறகு இச்சக்கரம் விஷ்ணு, கிருஷ்ணனை உணர்த்தும் குறியீடான 'சக்கரம்' என்றும் இவர்கள் விளக்கியுள்ளனர்[51]. மற்றும், அரசனுடைய ஆணைச் சக்கரமாகவும் இதனைக் கொண்டு இவர்கள் விளக்கம் தருகின்றனர்.

அஸ்கோ பர்போலாவின் குழுவினர் சிந்துவெளி எழுத்துகளின் வரிவடிவத்தினை ஆராய்ந்து, கண்டுள்ள முடிவுகள் சிலவற்றை இங்குக் காணலாம்.



| குறி | கருதி வரையப் பட்டுள்ள படம் | படத்துக்கு திராவிட மொழியில் உள்ள பெயர் | உணர்த்தம் படும் ஒலி | பொருள் |
|---|---|---|---|---|
|  | கப்பல் | ஓடம் | உடை | 'உடைமை' 'உரிமை' (தமிழில்) ஆகும் வேற்றுமை |
|  | குயவரின் சக்கரம் | ஆழி | ஆள் | 'ஆள்வதற்கு' 'ஆள்பவர்' |
|  | ஆலங்கட்டி | அளி | | |
|  | மீன் | மீன் | மின் | 'விண்மீன்' கோள் |
|  | கூரை | மேய் | மை | 'கருமை' |
|  | மேலே உள்ள இரு குறிகள் இணைந்துள்ளன | | மை-மின் | 'கரும் நட்சத் திரம்' கரியவன் மாயோன் |
|  | இல்வம் பூ | இலு | இல் | 'இல்வம்' |
|  | விரிக்கப்பட்ட கைகள், மனத் தால் குறித்தல் | மனம் | மன் | 'மன்னன்' |
|  | ஒரு பக்கம் மட்டும் தட்டும் மத்தளம் | தம்பட்டம் | தம்ப/பி தம்பி | 'தம்பிரான்' 'மேல்நிலை உடையவர்' |
|  | இறகு | இறை | இறை | 'இறைவன்' |
|  | குழல் இசைக்கருவி | யாழ் | யாழ் | தெய்வ இசைஞன் (நாரதர்) |
|  | சுற்று வேலி யின் உள்ளே கடக்கும் வழி | கதவு | கடவுள் | 'கடவுள்' 'தெய்வம்' |
|  | அமர்ந்திருக்கும் ஆள் | அய்யா | | 'அப்பா' |
|  | சீப்பு | பெண்டிக | பெண்டி | 'பெண்டிர்' 'பெண்பால்' |
|  | மேலே உள்ள இரு குறிகளின் இணைப்பு | | அம்ம | 'அம்மா' (பெண் தெய்வம்) |
|  | வரை ஒன்று | ஒரு, ஓர் | | '(ஒரு)வர்' |

பின்னிஷ் அறிஞர்களுடைய ஆய்வின் நோக்கையும் **போக்கையும்** இந்த அட்டவணைகளைக் கண்டு தெளியலாம். சிந்துவெளி எழுத்துகள் சிலவற்றிற்கு அவர்கள் கொண்டுள்ள பொருள்களை இந்த அட்டவணைகளில் காண்க.

| | | | | |
|---|---|---|---|---|
|  | தேன் | தேன் | தென் | 'தெளிவு' 'தேர்ந்த' |
|  | மேலே உள்ள இரு குறிகளின் இணைப்பு | | தென்-இர் | 'தேர்ந்தவர்' |
|  | மனிதன் | அன் | | 'மனிதன்' 'பணியாள்' |
|  | தேனும் மேலே உள்ள குறியும் இணைந்தவை | | தென்-அன் | 'தேர்ந்த மனிதன்' |

வேற்றுமை உருபுகளைப் பின்வருமாறு இவர்கள் வகைப் படுத்தியுள்ளனர்.[52]

| வேற்றுமை | வேற்றுமை உருபு (ஒருமை) | வேற்றுமை உருபு (பன்மை) |
|---|---|---|
| எழுவாய் வேற்றுமை (முதல்) | **இல்லை** |  வடிவம் இல்லை |
| ஆறாம் வேற்றுமை (கிழமைப் பொருள்) |  |  |
| நான்காம் வேற்றுமை (கொடைப் பொருள்) |  |  |

வேற்றுமை உருபுகளைக் கொண்டு, அவற்றோடு சேர்ந்து வழங்கும் சொற்களைப் பெயர்ச்சொற்களாக இவர்கள் கருதுகின்றனர். ஏழு வேற்றுமைகளுள், மூன்றே வேற்றுமைகள் (1,4,6) அக்காலத்தில் பெருவழக்காக இருந்தன என்பர்.

மரங்களின் அருகில் மனிதர் நின்று கொண்டிருக்கும் காட்சிகளும், மரத்தின் கிளைகளில் அமர்ந்தோ, கிளைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டோ நிற்கும் காட்சிகளும் முத்திரைகள் பலவற்றுள் அடையாளச் சின்னங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. அம்மரங்களின் கீழே புலிகளுடைய வடிவங்களும், அவற்றுக்கு மனிதர் யாதோ கொடுப்பது போன்ற காட்சிகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இக்காட்சி, மகளிர் வேங்கை மரத்து அடியில் நின்று கொண்டு, "புலி! புலி!" என்று கூவினால், பூத்துக் குலுங்கும் வேங்கை மரம், தன்னுடைய கிளைகளை அம்மகளிர் கைகளுக்கு எட்டும் வண்ணம் தாழ்த்தி நிற்கும் என்பது சங்ககாலத் தமிழ் மக்களின் நம்பிக்கையாகும், இதனை உணர்த்தும் தொல் பழங்காலச் சித்திரக் குறியீடாக இந்தக் காட்சிகளைப் பின்னிஷ் அறிஞர்கள் கொண்டுள்ளனர்.[53] மற்றும் புலியினை வாகனமாகக் கொண்ட கொற்றவையைக் குறிப்பதாகவும் இவர்கள் இதைக் கருதுகின்றனர். தாய்த் தெய்வத்தின் தலைமைக் குரு ஓதிய மந்திரமாக, அந்த முத்திரையின் எழுத்துகள் இருக்கக் கூடும் என இவர்கள் நம்புகின்றனர்.

## எழுத்துப் பொறிப்புகள் உணர்த்தும் செய்திகள்

பின்லாந்து நாட்டு அறிஞர்கள், சிந்து வெளிக் குறியீடுகளையும், கூட்டுக்குறியீடுகளையும் தொகைவகைப்படுத்தி, அவற்றின் பொருள்புலப்பாட்டைப் பின் வருமாறு பாகுபடுத்தியுள்ளனர்.

### 1. தெய்வங்களின் பெயர்கள்

(அ) நேர்த்திக் கடன் செலுத்தும் வாசகங்களில் உள்ள நான்காம் வேற்றுமை உருபுவடிவங்களால் (முன்பக்கம் பார்க்க) தெய்வங்களின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளமை அறியப்படுகின்றன.

(ஆ) ! ! எனும் சட்டகம் இத்தகைய பொருளையே உணர்த்
! ! துகிறது.

(இ) பெண்குரு (பூசாரி), கோயில் எனும் சொற்களை அடுத்து வரும் ஆறாம் வேற்றுமை உருபுகள் தெய்வங்களின் பெயர்களைச் சுட்டுவனவாக உள்ளன.

(ஈ) பெயர்களின் முன்வருவன துணைக்குறி (விளக்கப்படத்தில் உள்ள பன்னிரண்டாவது குறிகளாகும்).

2. அடைமொழிகளிலும் பட்டப்பெயர்களிலும் காணப்படும் பெயர்களும் பெயரடைகளும்

(அ) விகுதிகளின் திரிபுகளைத் தொடர்ந்து காணப்படும்
,, ,, ,, எனும் குறிகள்.

(ஆ) தெய்வங்களின் பெயர்களை அடுத்து வரும் ஆறாம் வேற்றுமை உருபின் வடிவம்

(இ) மேலே கண்ட துணைக்குறி அல்லாமல் 7 I போன்ற துணைக் குறிகளும் மனித தெய்வப் பெயர்களுக்கு முன்னால் பயன்படுத்தப் பட்டுள்ளமை.

பெரும்பாலும் பெயர்ச் சொற்களுக்கு முன்னடைகளாக இவை வழங்கப்பட்டுள்ளன. இவை யாவும் பட்டப் பெயர்களாகவோ, அடைமொழிகளாகவோ வழங்கப்பட்டு இருக்க வேண்டும்.

இவற்றைக் கண்டறிய உதவும் பொருள்கள் யாவுமே முத்திரைகளாக உள்ளன. அம்முத்திரைகள் அன்றாட ஆட்சி முறையிலும் வாணிகத்திலும் பயன்படுத்தப்பட்டனவாக இருத்தல் வேண்டும். அவற்றில் காணப்படும் எழுத்துப் பொறிப்புகள் யாவும், அந்தப் பண்டங்களுக்கு உரியவர்களின் பெயர்களாகத் தோன்றுகின்றன[54] என்பது இந்த ஆய்வாளர்களின் முடிவாகும்.



சிந்துவெளி முத்திரைகளில் எழுத்துப் பொறிப்புகள்

### கடல்கோளும் ஆற்று வெள்ளப் பெருக்கும்

இதை அடுத்து, மொகஞ்சொதாரோ எனும் பெயரைப் பற்றி அவர்கள் கொடுத்துள்ள விளக்கம் இங்குக் கருதத் தக்க தாகும். சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் திராவிடப் பழங்குடி மக்களுள் ஒரு பிரிவினர் வாழ்ந்தனர். அந்தக் கிளையினருக்கு 'மேலாக்கர்' எனும் பெயர் வழங்கியதாகப் பின்னிஷ் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக் கிளை மரபுப் பெயரில் இருந்து,

'மொகஞ்சொதாரோ' எனும் நகரத்தின் பெயர் தோன்றியிருக்கலாம் என்பது அவர்களுடைய நம்பிக்கையாகும்.

சிந்துவெளி மக்களுடைய நாட்டின் பெயர் 'மேலகம்' என்று வழங்கி இருக்க வேண்டும் என்று இவர்கள் துணிந்துள்ளனர். 'மேல்' எனும் வேர்ச் சொல்லிற்கு, 'மேல்பகுதி, மேற்கு, சிறந்தது' எனும் பொருள்கள்[55] வழங்குகின்றன. 'அகம்' எனும் விகுதி "வீடு, மனையகம், உள்ளே, மருதநிலம்"[56] எனும் பொருள்களைத் தரும். தமிழருடைய பழைய நாட்டிற்குத் 'தமிழகம்' எனும் பெயர் வழங்கியதைப் போன்று, 'மேலகம்' எனும் பெயர் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில், சிந்துவெளிக்கு வழங்கி இருக்கலாம் என்பர். பழந்தமிழ் இலக்கியத்துள், கடலினுள் மூழ்கி விட்ட தமிழகத்தைப் பற்றிச் சுட்டப் படுகிறது. அந்தத்தமிழகப் பகுதி, வெள்ளப் பெருக்கினால் அழிந்து போன சிந்துவெளி நாட்டினைக் குறிப்பதாகும் என்பது இவ்வறிஞர்களின் துணிவாகும்.

கடல் கொண்ட தமிழகத்தில் ஓடிய ஆறுகளான பஃறுளி, குமரி என்பன வடமேற்கு இந்தியாவில் (பாகிஸ்தானில்) ஓடும் ஆறுகளின் பழைய பெயர்களாக இருக்கலாம். இந்தக் கடல் கோள்களைப் பற்றித் தமிழ் இலக்கியம் கூறும் பழைய கதைகளையும் முதல், இடைச் சங்கங்கள் பற்றி வழங்கும் தொன்மையத்தையும் கருத்தூன்றி ஆராய்ந்தால், சில வரலாற்று உண்மைகள் வெளிப்படக்கூடும்[57] என்று இவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழிலக்கிய மரபில், கடல்கோள் பற்றி வழங்கும் செய்தி இங்கு நினைவு கூரத் தக்கதாகும். தமிழகத்தின் தெற்கே இருந்த நிலப்பரப்பு - குமரி நாடு—கடல் கொள்ளப்பட்டதாக நம் முன்னோர்கள் நம்பினர்.[58] கடல் கொள்ளப்பட்ட நிலப் பரப்பை ஈடுசெய்யும் வகையில் 'தென்திசை ஆண்ட தென்னவன் -பாண்டியன், வடதிசையில் இமயத்தையும் கங்கையையும் கைப் பற்ற முயன்றான்' என்பதே நாம் அறிந்த இலக்கிய மரபாகும்.

இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும், தொல்காப்பியத்தின் பழைய உரையாசிரியரான இளம்பூரணரும், சிலப்பதிகாரத்தின் சிறப்புமிகு விளக்கவுரை யாசிரியரான அடியார்க்கு நல்லாரும் முச்சங்க வரலாற்றோடு, தமிழகத்தின் தென்பகுதி கடல்வாய்ப் பட்டதைத் தெரிவித்துள்ளனர். கடல் கொள்ளப் பட்ட பழைய தமிழ்நாட்டைக் 'குமரித் தீவு' என்று வடமொழிப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. மற்றும், அந்நிலப் பரப்பு தெற்கே இருந்ததாக அவை தெரிவிக்கின்றன.

பின்லாந்து அறிஞர்களின் கருத்து வேறு வகையாக—மேற்கு நிலப்பரப்பைப் பற்றியதாக உள்ளமை இங்குக் கருதத்தக்கது. வருங்காலத்திய தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளாலேயே இந்தச் சிக்கல் விடுபட வேண்டும்.

தொன்மைத் திராவிடமொழி

சிந்துவெளியில் வழங்கிய மொழியைப் பற்றி இவர்கள் கொண்டுள்ள கருத்து மிகவும் தெளிவாக உள்ளது. கி.மு. 2500 அளவில் அங்கு வழங்கிய மொழி, தொன்மைத் திராவிட மொழியாக இருக்க வேண்டும் என்று இவர்கள் துணிந்துள்ளனர்.[59] கி.மு. 3000த்தின் இடைப்பகுதியில் ஈரானிய மேட்டுநிலம் வழியாகத் திராவிடர்கள் இந்தியாவிற்குள் நுழைந்திருக்க வேண்டும். அவர்கள் வடமேற்கு எல்லைப் பகுதியில் மாபெரும் நகரங்களைக் கோட்டை, கொத்தளங்களோடு அமைத்து, ஆற்றுவெளியில் உழவுத் தொழிலைப் போற்றி வளர்த்தனர். மற்றும் அவர்கள் கடல்வழியாக மெசொபடோமியாவோடு வாணிகமும் செய்து வந்தனர். கி.மு. 2000 அளவில், சிந்துவெளி நாகரிகம், கங்கை யமுனைப் பள்ளத்தாக்கு வரையிலும், சௌராஷ்டிரா, குஜராத் (லோதல்), ராஜஸ்தான், மகாராட்டிரப் பகுதிகளிலும் பரவியுள்ளதைக் காணுகின்றோம்[60] என்பது கோபன்ஹேகன் ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.

மொழியியல் அடிப்படையில், சிந்துவெளி எழுத்துகள் உணர்த்தும் மொழி இயல்புகளைப் பகுத்துப்பகுத்து இவ்வறிஞர்

ஆராய்ந்துள்ளனர் சிந்துவெளியில் வழங்கிய மொழி 'ஒட்டு நிலை மொழி'யாக இருந்ததை தக்க சான்றுகள் கொண்டு இவர்கள் நிறுவியுள்ளனர். இந்த வகையைச் சேர்ந்த இந்திய மொழிக் குடும்பம் திராவிட மொழிக் குடும்பமேயாகும் எனவும் இவ்வறிஞர்கள் அறிவித்துள்ளனர் [61] திராவிட மொழிகள் ஒட்டு நிலைச் சொல்லமைப்பு உடையன என்பது உலகறிந்த உண்மை.

'சிந்துவெளியில் வழங்கிய மொழி திராவிட மொழி (பழந் தமிழ்)' எனக் கொள்வதற்குத் தடையாகக் காட்டக்கூடிய கருத்து ஒன்றினை இவர்களே சுட்டியுள்ளனர். "முதன்முதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ள திராவிட மொழிச் சான்று (சங்க இலக்கியம்) களுக்கும் சிந்துவெளி சின்னங்களால் அறியப்படும் திராவிட மொழிக்கும் இடையே 2000 ஆண்டுக்கால இடைவெளி உள்ள போது, இக்கருத்து எவ்வாறு பொருந்தும்?" எனும் தடையினை எழுப்பியுள்ளனர். [62]

இத்தடையினைப் போக்கவும், தவிர்க்கவும் பின்லிஷ் அறிஞர் களே முயன்றுள்ளனர். 'முதலாவதாக இந்த இடைவெளி 2000 முதல் 1500 ஆண்டுகள் அளவினதாகும். சிந்துவெளி நாகரிகத் தின் இறுதிக் காலத்திய சின்னங்களை லோதல் (Lothal), காலிபங் கன் (Kalibangan) என்னும் இடங்களில் அகழ்ந்து எடுத்துள்ள னர். அவை கி. மு. 1800 அளவில் உறாரப்பா நாகரிகம் விளங்கிய நிலையைக் காட்டுகின்றன. தமிழின் மிகப்பழைய கல்வெட்டு கள் குறைந்தது கி. மு. மூன்றாம் நூற்றாண்டினைச் சார்ந்தன வாகும். எனவே, இவற்றிடையே கால இடைவெளி 1500 ஆண்டுகளாகவே இருக்கதல்கூடும். இருக்குவேதம் முதற்கொண்டு (வேதத் தொன்மை சம்ஸ்கிருதம், பாலி, பிராகிருதம், காப்பியச் சம்ஸ்கிருதம்) இந்திய-ஆரிய மொழியில், திராவிட மொழியிலி ருந்து கடன்வாங்கப்பட்ட சொற்கள் பெருகிக் கொண்டே வந்துள்ளதைக் காணுகின்றோம். எனவே, சிந்துவெளியில் திராவிட மொழி அழிந்தொழியாது தொடர்ந்து கடன் கொடுக் கும் அளவிற்குச் செல்வாக்குடன் செழித்தோங்கியமை புலனா

கின்றது, ஒட்டுநிலை மொழிகள் மிகுதியாகப் பழமையைப் போற்றி வருகின்றன. திராவிடமொழிகள் ஒட்டுநிலை மொழி வகையைச் சேர்ந்தவை. "விரைவாக வளருவதோ, தலைகீழாக எளிதில் மாற்றம் அடைவதோ திராவிட மொழிகள் இடையே காணப்படவில்லை. கடந்த மூவாயிரம் ஆண்டுகளில் அவை ஐந்து முதல் எட்டு விழுக்காட்டு அளவே மாற்றம் அடைந்துள்ளன" எனும் டாக்டர் பர்ரோவின் கருத்து இங்கு நினைவு கூர்தற்கு உரியதாகும். எனவே 'கால இடைவெளி' எனும் பேச்சிற்கே இடமில்லாமல் போகிறது" என்பர்.

"சமயத்துறையில் சிந்துவெளி நாகரிக காலம் முதற் கொண்டு இன்றுவரை, பல நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், கருத்துகள் இந்தியாவில் நின்று நிலவி வருகின்றன."

"தமிழ்மொழியின் வரலாற்றை ஆராய்வோமானால், கடந்த ஈராயிரம் ஆண்டுகளில் புறக்கணித்தக்க ஒரு சிறிது அளவு மாற்றத்தையே தமிழ்மொழி அடைந்திருப்பது புலனாகின்றது. ஆற்றல்மிக்க சம்ஸ்கிருதத்தின் தாக்கத்தால் கூடத் தமிழ் நிலைகுலையவில்லை. சம்ஸ்கிருதத்தின் செல்வாக்குக் கடன் வாங்கப்பட்ட சொற்களோடு நின்றுவிட்டது. எனவே, பழைய தமிழ்மொழி, சிந்துவெளி மொழியின் வழித்தோன்றலாக இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ளுவதில் யாதொரு குறையும் இல்லை" என்று இவர்கள் விளக்கம் தந்துள்ளனர்.[63]

கருத்தொற்றுமை

மீன் வடிவம், வேற்றுமை உருபுகள், எண்ணுப் பெயர்கள் போன்றவை ஹீராஸ், ருஷ்ய அறிஞர், பின்லாந்து நாட்டு அறிஞர் ஆகியோரின் கண்டுபிடிப்புகளில் வேறுபாடு இன்றி, ஒரே தன்மையுடையனவாகக் காணப்படுகின்றன. சமயத் தொடர்பான செய்திகள், எழுத்துப் பொறிப்புகளில் காணப்படுவதாக மூவரும் முடிவு செய்துள்ளனர்,

சுமேரியர்களும் பாபிலோனியர்களும் வானவியல் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே, சிறப்புமிகு வானவியல் அறிஞர்களாக சிந்துவெளி மக்கள் விளங்கினர் என்று இவர்கள் துணிந்துள்ளனர். சிந்துவெளி மக்கள் நட்சத்திரங்களையும் கோள்களையும் வழிபட்டனர். சிவனைச் செவ்வாயோடு தொடர்புடைய தெய்வமாகவும், கிருஷ்ணனைச் சனியோடு தொடர்புடைய தெய்வமாகவும் கருதி, அவர்கள் வழிபட்டதாகப் பின்னிஷ் அறிஞர்கள் கூறுகின்றனர்.



எனும் குறியீடுகளின் இணைப்பு தொல்பழங்காலச் சிவனுடைய முக்கண்களையும், மீனாட்சியின் முற்பட்ட வடிவத்தையும் சுட்டுவதாகத் திருத்தந்தை ஹீராகப் பாதிரியார் கருதுகிறார்.

வரலாற்றுக் கால இந்தியச் சமயங்களில் காணப்படும் இயல்புகளும், கூறுகளும் சிந்துவெளி நாகரிக மக்களிடையே நிலவியவை என்பதை,திராவிடச் சார்புடைய இம்மூவகை ஆராய்ச்சியாளர்களும் உடன்படுகின்றனர். ஹாரப்பா நாகரிகத்தில், பிற்காலத்திய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இடம் பெற்றிருந்ததாக இவர்கள் நம்புகின்றனர். ருஷிய அறிஞர்கள், முதல்கட்ட ஆராய்ச்சியின் பொழுது 'சமயச் சடங்குகளை' உணர்த்தும் எழுத்துப் பொறிப்புகளையே ஆராய்ந்ததாகத் தெரிவித்துள்ளனர். பின்னிய ஆராய்ச்சியாளர் சில குறியீட்டுக் குழுக்கள், தெய்வங்களின் பெயர்களைப் புலப்படுத்துவதாகக் கூறியுள்ளனர்.

ருஷிய அறிஞர் முருகனைச் சுட்டும் பல்வேறு பெயர்களை எழுத்துப் பொறிப்புகளில் படித்துள்ளனர்,



இவ்வடிவினை 'வேலன்' என்று ஹீராசுப் பாதிரியாரும், ருஷிய நாட்டு அறிஞர்களும் கொண்டுள்ளனர்.[64]



இவ்வடிவம் கார்த்திகைப் பெண்டிர் அறுவரைக் குறிப்பதாகக் கொண்டு, ''அறுமீன் அன்பன்'' என்று முருகனைச் சுட்டுகின்றனர்.



இக்குறியீட்டினைச் ''செந்நிறக் கோளுக்கு உரியோன்'' என்று படித்துள்ளனர். செவ்வாய்க் கிரகம் முருகனுக்குரியது என்பது இதன் பொருள்.

பின்னிய அறிஞர்களும் நட்சத்திரங்கள், கோள்கள் வடிவில் சிவன், முருகன், கொற்றவை (துர்க்கை), விஷ்ணு போன்ற தெய்வங்களைச் சிந்துவெளி மக்கள் வழிபட்டதாகக் கருதுகின்றனர். சிவனுக்குப் பல பெயர்கள் வழங்கியதைக் கண்டு அறிவித்துள்ளனர்.[65]

சேயோன் (சிவன்)



செந்நிற நட்சத்திரம் (சிவன்)



சிவனுடைய சக்தியாகிய துர்க்கையைப் படம் 5 எனும் வடிவில கண்டுள்ளனர். இதன் 6 எனும் வடிவம் ஆண்பாலை (சிவனை) உணர்த்தும். இவ்வடிவத்திற்குரிய பெண்பால் வடிவமாக இதனைக் கூறுவர்.



5 6



முருகன் (செந்நிற நட்சத்திரங்கள்)



மைமீன் (கருநிற நட்சத்திரம்)

திருமால் (விஷ்ணு-கிருஷ்ணன்)

இத்தகைய ஒற்றுமைப் பண்புகள், இந்த மூவகைத் திராவிடச் சார்புடைய ஆராய்ச்சியாளர்கள் சிந்துவெளி எழுத்துப் பொறிப்புகளைப்படித்தறிய மேற்கொண்ட முயற்சிகளால் புலனாகின்றன. இவற்றோடு, அங்கு வழங்கிய 'ஒட்டுநிலை' அமைப்புடைய மொழி, பழந்திராவிட (Proto-Dravidian) மொழியாக இருக்க வேண்டும் என்றும் இவர்கள் துணிந்துள்ளனர். மேலும், அங்கு வாழ்ந்த மக்கள் சிந்தனைப் போக்காலும், பழக்க வழக்கங்களாலும் இன்றைய திராவிட இனமக்களின் மூதாதையராகவே காட்சி தருகின்றனர் என்பதைத் தக்க சான்றுகள் தந்து இவர்கள் நிறுவியுள்ளனர்.

## ஓர் ஐயம்

சங்க காலத் தமிழ் மக்கள், தொடக்க காலத்தில்—சமண, பௌத்த, வைதிக சமயங்களின் ஊடுருவலுக்கு முற்பட்ட காலத்

தில்—புராணக் கற்பனைகள் அற்றவராயும், உலகியல் பற்று உடையவராயும், அறத்தின் வழிப்பட்ட மனித நலனை நாடுபவ ராகவும் வாழ்ந்தனர். இதனைச் சங்கப் பாடல்களுள் பழமை யானவை தெரிவிக்கின்றன.

அவர்களுடைய முன்னோர்களே, 'சிந்துவெளியில் வாழ்ந்த 'தொல்பழங்காலத் திராவிடர்' என்பது அறிஞர்களும் ஆராய்ச்சி யாளர்களும் கொண்டுள்ள கருத்தாகும். ஆனால், சங்க காலத் தமிழர்கள் அறியாதனவற்றையும், அவர்களுடைய சிந்தனையில் தோன்றாதவற்றையும் பண்டைத் தமிழருடைய மூதாதையர், சிந்துவெளிப் பண்பாட்டிற்கு வழங்கியுள்ளதாகச் 'சிந்துவெளிப் பண்பாடு திராவிடர் உருவாக்கியது' எனும் எண்ணப் போக்கு உடைய அறிஞர்கள் கூறி வருகின்றனர்.

சிந்துவெளி மக்களின் சிந்தனைப் போக்கில் காணப்படுவதாகச் சுட்டப்படும் சிறப்பு இயல்புகளுள் இரண்டினைக் காண்போம்.

1. மத குருமார்களின் ஆதிக்கத்திற்குட்பட்டது சிந்துவெளி சமுதாயம்; மதகுருமார்களே ஆட்சியாளர் (அரசர்)களாக இருந்திருத்தல் வேண்டும்.

2. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டையொட்டி 'இந்தியப் புராணங்கள்' தோன்றின; ஆகமங்களும் ஏறக்குறைய அக் காலத்திலேயே தோன்றத் தொடங்கின. இவையாவும் சமஸ் கிருதத்தில் இயற்றப்பட்டுள்ளன. இவற்றில் சிறப்பித்துப் பேசப் படும் நாள், கோள்களின் வண்ணம், வடிவம், இயக்கம் பற்றிய செய்திகள், பல்வேறு தெய்வங்களைப் பற்றிய பழங்கதைகள், இவற்றின் தொடர்பான மூட நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் பல, சிந்துவெளி மக்களிடம் இருந்தனவாகக் காட்ட அறிஞர்கள் முயன்று வருகின்றனர்.

இவற்றை எல்லாம் காலவரன் முறைப்படுத்திப் பார்க்கின்ற பொழுது ஓர் ஐயம் உண்டாகிறது. 'முன்னோர்கள் நன்கு

அறிந்து இருந்தவற்றை,போற்றிப் பின்பற்றியவற்றை, அவர்கள் வழித்தோன்றல்களான 'சங்க காலத் தமிழ் மக்கள் ஏன் புறக் கணித்தனர்? எதற்காகக் கைவிட்டனர்? எவ்வாறு மறந்தனர்?' எனும் எண்ணம் எழுகிறது.

ஒரேவோர் அமைதிதான் இதற்குப் பொருத்தமாகக் கூற இயலும். பிற்பட்ட கால நாகரிக வளர்ச்சி நிலையைச் சிந்து வெளித் தொல்பொருள் சின்னங்கள் காட்டுகின்றன. இதற்கு முற்பட்ட தொன்மைக் கால நிலையைச் சங்கப் பாடல்கள் சித்திரிக்கின்றன எனலாம். இது எவ்வாறு இயலும்?

திராவிட இனத்தின் தொன்மைத் தாயகம் (ஹீராசு அறிவிப்பதைப் போன்று) கடல் கொண்ட குமரிநாடாகும். அங்குச் சிறப்புற்று விளங்கிய திராவிட இனத்தவரின் ஒரு பிரிவினர், வடக்கு நோக்கிச் சென்று குடியேற்றப் பகுதிகளை அமைத்து இருக்க வேண்டும்; அவர்களே பாரதத்தின் வடமேற்குப் பகுதியில் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் குடியேறி இருக்க வேண்டும்; சிந்துவெளியில், மருதநில நாகரிகத்தை அவர்கள் போற்றி வளர்த்து இருக்க வேண்டும். இவ்வாறு வளர்ந்து சிறந்ததே, இன்று அகழ்வாராய்ச்சியால் அறியப்படும் மொகஞ்சொதாரோ, ஹாரப்பா சின்னங்கள் காட்டும் சிந்துவெளிப் பண்பாடாகும்.

தென்னகத்தில் தொடர்ந்து வாழ்ந்த திராவிட இனத்தவரின் பெரும்பகுதியினரே, சங்க காலத் தமிழ்மக்களின் முதாதையராவர். இவர்களுடைய வாழ்க்கை முறையும், எண்ணப் போக்கும் சங்க காலத் தமிழ் மக்களுடைய நாகரிகத்தின் அடிப்படையாக அமைந்து இருத்தல் கூடும் எனக் கருதுவதே இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு உதவி புரியும். வடக்கே சென்றவர் இடையே புராணக் கலப்பு வாய்ந்த சிந்தனை அரும்பி இருக்கலாம்.

சிந்துவெளிச் சின்னங்களில் பரவலாகச் சங்குகளின் ஓடுகள் கண்டு எடுக்கப் பட்டுள்ளன. அவை பெரிதும் தமிழ்நாட்டின்

தெற்குக் கடற்கரைப் பகுதிகளில் கிடைப்பனவாகும். திருநெல்வேலி மாவட்டத்திலும், பழங்காலத் துறைமுகமான கொற்கையைச் சுற்றிலும் தீவிரமான அகழ்வாராய்ச்சி நடத்தப்படுமானால், சிந்துவெளி நாகரிகச் சின்னங்களோடு தொடர்புடைய சமகாலத்திய அல்லது சிறிது பிற்பட்ட காலத்திய சின்னங்கள் ஒருநாள் உறுதியாகக் கண்டுபிடிக்கப்படும். அப்பொழுது தமிழ் மக்களுடைய நாகரிகத்தின் தொன்மைச் சிறப்பு வெளிப்படும்[66] எனும் தொல்பொருள் ஆய்வாளரின் துணிவு, மேற்கண்ட கருத்திற்கு ஊற்றம் அளிப்பதாகும்.

ஐராவதம் மகாதேவனின் முயற்சி

தமிழ் நாட்டைச் சேர்ந்த அறிஞர் திரு. ஐராவதம் மகாதேவன் I. A. S., தமிழகத்தின் தென் பகுதிகளில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகளை ஆராய்ந்து, உலகப் புகழ் பெற்றுள்ளார். 1970இல் ருஷிய, பின்னிய அறிஞர்களின் ஆராய்ச்சியால் வெளிப்பட்ட சில உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு, "சிந்துவெளி எழுத்துகளுக்குப் புதியதொரு விளக்கத்தை" இவர் கொடுத்துள்ளார்.

சங்க இலக்கியத்தில் சிறப்பாகப் பேசப்படும் வேளிர்களையும் கோசர்களையும் சிந்துவெளி மக்களோடு தொடர்புபடுத்தி இவர் விளக்கியுள்ளார். "பழைய-இந்திய (சிந்துவெளி) நாகரிகம் திராவிடருடையதே யாகும். அங்குக் காணப்படும் குறியீடுகளில் உள்ள எழுத்துகளின் ஆராய்ச்சியால் தெரிய வரும் சிந்துவெளி மொழி, பொதுவாகத் தென்திராவிட (தெலுங்கையும் சேர்த்துக் கொள்ளுகிறார்) மொழிகளையும், சிறப்பாகப் பழந்தமிழையும் ஒத்துள்ளது" எனும் முடிவிற்குத் திரு. ஐ. மகாதேவன் வந்துள்ளார்.[67]

1972ஆம் ஆண்டு வெளியிட்ட ஆய்வுரை ஒன்றில் "நாகரிக இயல்புகளாலும், மொழி அமைப்பு முறையாலும், வட இந்திய மக்கள் வாழ்க்கையில் காணப்படும், திராவிடப் பண்பாட்டின்

தாக்கத்தாலும் ஹாரப்பாவின் பண்பாடு, திராவிடச் சார்புடையது எனக் கூறுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆயினும், 'சிந்துவெளி எழுத்துகளின் சிக்கல்' ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் காலம் கனியும் பொழுதுதான், இதனை உறுதியாகக் கூற இயலும்''[68] என்று திரு. மகாதேவன் தெரிவித்துள்ளார்.

'இருமொழி இணைகள் சில' எனும் தலைப்பில், 'ஆழி' எனப் படும் குறியீட்டை வேதகால 'சூரிய சக்கர'த்தோடு தொடர்பு படுத்தி இவர் விளக்கம் தந்துள்ளார். சூரிய வழிபாட்டு மரபினை அச்சின்னம் உணர்த்துவதாகத் துணிகிறார். பிறகு,

சூரிய தெய்வ அரசன்

↓

சூரிய சக்கரம்

↓

சக்கரம்

↓ ↓ ↓

| | | |
|---|---|---|
| கடவுளின் சக்கரம் (விஷ்ணு சக்கரம்) | அறவாழி (தருமசக்கரம்) | அரசனின் ஆணைச் சக்கரம் (சக்கரவர்த்தி) |

இந்த விளக்கத்தைத் தந்த பிறகு, "சக்கரக் குறியீடு', குறிகளின் ஒலி மதிப்போடு தொடர்பு கொண்டு இருப்பதாகத் தெரியவில்லை'' என்று திரு. மகாதேவன் அறிவித்துள்ளார். மேலும் ''ஆழி'க் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு திராவிட மொழிச் சொற்கள் படைக்கப்பட்டுள்ளன எனும் கருத்து (பின்லாந்து நாட்டு அறிஞர்களின் விளக்கம்) பொருந்தம் அற்றதாகும். ஒருகால்', திரிந்த பிற்கால சம்ஸ்கிருத மரபில் இருந்து, மேற்கண்ட முறையில் திராவிட மொழிச் சொற்கள் படைக்கப்பட்டு இருக்கலாம்''[69] என்று இவர் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதைக் காண்கிறோம். இதே பாணியில்

அந்த ஆய்வுரை முழுவதும் வேதகால மொழி, பண்பாட்டோடு சிந்துவெளி வரிவடிவங்களை இணைத்துக் காட்டும் முயற்சியே மேற்கொள்ளப் பட்டுள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

இதற்குப் பிறகு, ஜவகர்லால் நேரு அறக்கட்டளையின் நிதி யுதவியுடன், நான்கு ஆண்டுகள் சிந்துவெளி எழுத்து வடிவங் களைத் திரு. மகாதேவன் ஆழமாகவும் நுட்பமாகவும் ஆராய்ச்சி செய்துள்ளார். இதன் விளைவாக 1977இல் இந்தியத் தொல் பொருளியல் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில், "சிந்துவெளி எழுத்துகள்: மூலவடிவங்கள், குறியீட்டுக் கோவை, அட்டவணை கள்" (The Indus Script : Texts, Concordance and Tables) எனும் வரிவடிவக் குறியீடுகளின் தொகுதியான மாபெரும் நூலை இவர் வெளியிட்டுள்ளார். இதன் முன்னுரையில் "சிந்துவெளி எழுத்து களின் வரிவடிவ ஆராய்ச்சி, இந்த நூலின் அடிப்படை நோக்கத் திற்கு அப்பாற்பட்டது" என்று திரு. மகாதேவன் அறிவித்துள் ளார். குறியீட்டுக் கோவையைத் தயாரிக்க அரும்பாடுபட்ட அறிஞர், எழுத்து வடிவ ஆராய்ச்சியில் ஈடுபடாமல் ஒதுங்கி நிற் பதற்கு உரிய காரணங்களைத் தெரிந்து கொள்ள இயல வில்லை.

இந்தச் சிறப்புமிகு நூலைத் தக்க அடிப்படையாகக் கொண்டு குன்றாத ஆர்வமும், பரந்துபட்ட மொழியியல் அறிவும் வாய்த்த இளைஞர்கள் சிந்துவெளி வரிவடிவ ஆராய்ச்சியில் ஈடுபடுவார்களானால், பல புதிய உண்மைகளை வருங்கால உலகத்திற்கு உணர்த்த இயலும் என்பது உறுதி.

இயல் 6

# செப்புப் பட்டைகளிலும் மண்பாண்டங்களிலும் காணப்படும் குறியீடுகள்

சிந்துவெளிச் சின்னங்களில் பேரளவிற்குச் சுடு மண்ணாலான அச்சு முத்திரைகள் கிடைத்துள்ளன. ஓரளவிற்கு நுரைக்கல்லாலான முத்திரைகள் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் எழுத்துப் பொறிப்புகள் தவறாமல் இடம் பெற்றுள்ளன. இவை யல்லாமல் செப்புப்பட்டை சிறு நறுக்குகள் பல கிடைத்துள்ளன. இவற்றிலும் முத்திரைகளில் காணப்படுவதைப் போன்ற எழுத்து வடிவங்கள் சிறியதும் பெரிதுமாகக் கிடைத்துள்ளன. சிந்துவெளி வரிவடிவ ஆராய்ச்சியாளர்கள், இதுவரையில் இவற்றை முழுமையாகவோ, நுட்பமாகவோ ஆராயவில்லை.

## செப்புப்பட்டைகள்

எழுத்துப் பொறிப்புடைய ஏராளமான செப்புப்பட்டைகளைச் சிந்துவெளியின் மொகஞ்சொதாரோ சின்னங்களில் மார்ஷலும், மேக்கேயும் அகழ்ந்து எடுத்துள்ளனர். இச்செப்புத்துண்டுகள் சதுரமாகவோ, நீண்ட சதுர வடிவுடையன வாகவோ உள்ளன. இவை சராசரி 2.3 செ.மீ. சதுரமாகவோ, 3.8 செ.மீ. X 2.5 செ.மீ. அளவுடைய நீண்ட சதுரமாகவோ உள்ளன.

இவை, எழுத்துப் பொறிப்புகளைக் கொண்ட முத்திரைகளில் இருந்தும், நுரைக்கல்லில் இருந்தும் வேறுபட்டனவாக உள்ளன. மற்றவற்றில் எல்லாம், ஒருபக்கத்திலேயே வடிவமும் எழுத்துப் பொறிப்பும் செதுக்கப்பட்டுள்ளன. செம்புப்பட்டைகளின் ஒரு பக்கத்தில் எழுத்துப் பொறிப்புகளும், மறுபக்கத்தில் சின்னமோ, விலங்கின் வடிவமோ பொறிக்கப்பட்டுள்ளன. இது செப்புப்பட்டைகளின் அமைப்பில் காணப்படும் சிறப்பியல் பாகும். இச்செப்புத் துண்டுகளைத் தாயத்துகள் என்றும், காசுகள் என்றும், பத்திரங்கள் என்றும் பலவாறாகக் கருதுகின்றனர்.

செப்புப்பட்டைகளில் பெரும்பாலும் ஒரு வரியே எழுதப் பட்டு இருக்கும்; விதிவிலக்காக இரண்டொன்று கிடைத்து இருக்கக் கூடும். எழுத்துப் பொறிப்புகள் வலம் இருந்து இடமா கவே பொறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய செப்புப்பட்டைகள் ஏறக்குறைய 125 கிடைத்துள்ளன. ஒவ்வொரு பட்டையிலும் ஒன்று முதல் ஏழு எழுத்துப் பொறிப்புகளே காணப்படுகின்றன.

பக்கம் 42ல் காணப்படுவதைப் போன்ற வடிவங்களே மிகுதியாக உள்ளன. இவை மேகம், ஆறாம் வேற்றுமை உருபு, ஆள் (ஆடவன், மனிதன்), பெண் எனும் பொருளைத் தருவன என்பதை நாம் முன்னரே கண்டோம். இவற்றைப் போன்ற வேறு சில குறிகளும், செப்புத் துண்டுகளில் காணப் படுகின்றன. பெரும்பாலும் இந்த வரி வடிவங்கள், முத்திரை களில்உள்ள எழுத்துப் பொறிப்புகளை ஒத்தனவாகவே உள்ளன.

செப்புப்பட்டைகளில் புலி, யானை, மான், ஆடு, காண்டா மிருகம், கற்பனை விலங்குகள், அரசமரம், மீன், பாம்பு, புறா, பெண்பூசாரி போன்ற வடிவங்களே காணப்படுகின்றன. இவை யாவும் முத்திரை வடிவங்களோடு பேரளவிற்கு ஒத்துள்ளன.

இந்தச் செப்புப்பட்டை எழுத்துப் பொறிப்புகளும் சிந்து வெளி எழுத்து முறையில் திராவிடச்சார்பு இருப்பதைப் புலப் படுத்துகின்றன.

மண்பாண்டக் குறிகள்

சிந்துவெளியில் மண்பாண்டம் செய்யும் கலை, நன்கு வளர்ச்சியுற்று இருந்தது. கறுப்பு, சிவப்பு மண்பாண்டங்களின் மீது கீறல்களாகச் சில குறிகளைப் பொறிப்பது பண்டைக் கால வழக்கமாகும். இத்தகைய மண்பாண்டக் கீறல்களை, 'மண் பாண்டக் குறிகள்' (Graffiti) எனப் போற்றுவர்.

தென் இந்தியாவில், இரும்புக் காலச் சின்னங்களில், குறி களை உடைய மண் பாண்டங்களும், உடைந்த ஓட்டுத்

துண்டுகளும் பேரளவில் கிடைத்துள்ளன. இரும்புக் காலப் பண்பாட்டின் பிற்பகுதியைப் 'பெருங்கல் காலம்' (Megalithic Age) என்னும் பெயரால் சுட்டுவர். இக்காலத்திற்குரிய சிறப்பியல்பு கறுப்பு-சிவப்பு நிற மண்பாண்டமாகும். இவை சிந்துவெளி மண் பாண்டங்களோடு நெருங்கிய தொடர்பு உடையன.

சிந்துவெளி பண்பாண்டங்களின் கீழ் எல்லையான கி.மு. 2000த்தைச் சேர்ந்த 'லோதல்' எனும் இடத்தில் இத்தகைய மண்பாண்டங்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. தென்னிந்தியாவில் பெருங்கல் மண்பாண்டங்களில்தான், முதன் முதலாக இக்குறியீடுகள் காணப்படுகின்றன. வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த சின்னங்களான கொற்கை, காவிரிப் பூம்பட்டினம், உறையூர், அரிக்கமேடு, திருக்காம்புலியூர் போன்ற இடங்களில் தமிழி (தென்பிராமி) எழுத்துகளில் பொறிக்கப்பட்ட சொற்கள் சிலவற்றைக் கொண்ட மண் பாண்ட ஓடுகள் கிடைத்துள்ளன.

மண்பாண்டக் குறிகளை ஆராய்ந்த அறிஞர் ஒருவர் அக்குறிகளை ஒருவகை எழுத்து வடிவமாகவே கருதுகிறார்.[71] இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் தனிப் பெருந்தலைவராக விளங்கிய டாக்டர் பி.பி. லால் என்பவர், பெருங்கல் மண்பாண்டக் குறியீடுகளில் இருந்து ஹாரப்பா எழுத்து முறைக்குப் பின் நோக்கிச் செல்லும் முறையில் (From the Megalithic to the Harappan tracing back the graffiti on the Pottery)[72] ஆராய்ந்து, சில உண்மைகளை உலகிற்கு உணர்த்தி யுள்ளார்.

"சிந்துவெளி மண்பாண்டக் குறிகளுக்கும் தென்னாட்டுப் பெருங்கல் பண்பாட்டு மண்பாண்டக் குறிகளுக்கும் இடையே காணப்படுவது ஒற்றுமையா? அல்லது பண்பாட்டுத் தொடர்பால் உண்டானவையா?" எனும் எண்ணம் ஆராய்ச்சியாளர் இடையே இயல்பாக எழக்கூடும் என்று

டாக்டர் பி.பி. லால் தெரிவிக்கிறார். ''எதிர்பாரா வகையில் உண்டான ஒற்றுமை எனக் கூறினால், ஏறக்குறைய தொண்ணூறு விழுக்காட்டு அளவிற்குக் காணப்படும் ஒற்றுமையைப் புறக்கணிப்பதாக முடியும்'' என்று அவரே விடையும் அளித்துள்ளார்.

பெருங்கல் பண்பாட்டு மண்பாண்டக் குறிகளைத் தொகைவகைப் படுத்தி, 53 வகையினதாக பி.பி. லால் பிரித்துள்ளார். அவற்றின் அமைப்பையும் வடிவத்தையும் சிந்துவெளி மண்பாண்டக் குறிகளோடும், எழுத்து வடிவங்களோடும் ஒப்பிட்டு இவர் ஆராய்ந்துள்ளார். சிந்துவெளி எழுத்துகளில் தமிழ்நாட்டுப் பெருங்கல் கால மண்பாண்டக் குறியீடுகள் 89% விழுக்காடு காணப்படுகின்றன என்பதைத் தக்க சான்றுகளின் அடிப்படையில் இவர் நிறுவியுள்ளார். ஹாரப்பா முத்திரைகளில் காணப்படும் எழுத்து வடிவங்கள் பல, தமிழ்நாட்டுப் பானை ஓடுகளில் கீறல்களாக உள்ளனவாம். மற்றும் சில தென் பிராமி எழுத்துகளாக அமைந்துள்ளனவாம்.[73]

தென்னாட்டு மண்பாண்டக் குறிகள், சிந்துவெளி ஓவிய எழுத்துகளில் இருந்து பையப்பைய வளர்ந்து வந்துள்ள 'கருத்தோவிய' எழுத்துகளாக உள்ளதை மண்பாண்டக் குறியீட்டு ஆராய்ச்சி அறிவுறுத்துகிறது. இந்த வகையில் நோக்கினாலும் சிந்துவெளி எழுத்து வடிவங்கள் திராவிடச் சார்பு உடையனவாகவே தோன்றுகின்றன.

இன்றைய நிலையில் ...!

கடந்த அறுபது ஆண்டுகளாகச் சிந்துவெளி எழுத்து வடிவ ஆராய்ச்சி வளர்ந்து வந்துள்ளது. பல்வேறு வகைப்பட்ட கருத்துகள் வெளியிடப் பட்டுள்ளன. ஆயினும், அவற்றில் முனைப்பாக உள்ளதும் பேரளவிற்குத் தக்க சான்றுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதும் 'சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழிச் சார்புடையன' எனும் கருத்தையே வலியுறுத்துகின்றன.

இதனை மொழியியல் ஆராய்ச்சியும் ஒப்புக் கொள்ளுகிறது. அண்மையில் டேவிட் மெக் அல்பின் (David Mc Alpin) எனும் அறிஞர், நடுகிழக்கு நாடுகளின் பண்டை மொழிகளை ஆராய்ந்துள்ளார். தொல் பழங்காலத்தில் (கி.மு. 4000 அளவில்) பழைய எலாமிய திராவிட மொழிக் குடும்பம் ஒன்று அப்பகுதியில் சிறப்புற்று விளங்கியதைத் தக்க காரணங்கள் காட்டி இவர் நிறுவியுள்ளார்.[74] அந்த மொழிக் குடும்பம் தெற்கு ஈரான் (பழைய பாரசீகம்) முழுவதிலும் பரவி இருந்ததோடு, தெற்கு ஆசியாவின் மேற்குப் பகுதியை முழுமையாகத் தழுவிக் கொண்டு இருந்ததாகக் கூறுகிறார் டேவிட் மெக் அல்பின்.[75] இந்த மொழியியல் இணைப்பு, பண்பாட்டு வரலாற்று அடிப்படையில், சிந்து வெளி எழுத்துகள் பழந்திராவிட மொழிக்கு உரியன என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வந்துள்ள முடிவிற்கு உரம் ஊட்டுவதாகும்.

சிந்துவெளியின் சிக்கலைத் தீர்க்க 'இருமொழி எழுத்துப் பொறிப்புகள்' கிடைக்கும் வரையில், மேற்கண்ட ஆய்வுகளின் அடிப்படையில், "சிந்துவெளி எழுத்து வடிவங்கள் பழந்திராவிட மொழிக்குரியன" எனக் கொள்ளுவதே பொருத்தமாகும்.

# குறிப்புகள்

1. G. R. Hunter, Scripts of Harappa and Mohenjodaro and its connection with other scripts, London, 1934; p.12.

2. Robert Davreu, The World's Last Mysteries, London, 1967, pp. 121-123.

3. Iravatham Mahadevan, The Indus Script, Texts, Concordance and Tables. Memoirs of the *Archaeological Survey of India, New Delhi, 1977,* p.14.

4. Stuart Piggott, Prehistoric India, Pelican Books, G. B., *1950*, p. *180*.

5. L. A. Waddell, The Indo-Sumerian Script Deciphered, London, 1925, p. 180,

6. Rev. H. Heras, Studies in Proto-Indo Mediterranean Culture, Vol. I, Historical Research Institute, Bombay, 1953: pp. 143.

7. Bankabehari Chakravarti, Decipherment of Indus Script: A New Light, *India Publications, Calcutta,* 1975: p. 7.

8. Ibid, p. 7.

9. Sir John Marshall, Mohenjodaro and the Indus Civilization, 3 Vols., London, 1931; Ch. 23, Vol. 2, p. *431*,

10. C. J. Gadd, Seals of Ancient Indian Style found at Ur', Proceedings of the British Academy, London, No. 18: 1932. pp. 67-74.

11. Sir W. F. Pertrie: 'Mohenjodaro', in Ancient Egypt, 1932, pp. 33-40.

12. C. L. Fabri, Indian Culture, Vol. 1, p. 53.

13. M. G. Hevasey, 'Sur Une Ecriture Oceanienne Paraissant d' Origine Neolithic', bulletin de la Societe Prehistorique Francaise, Vol. 30: pp. 234-449.

14. Ibid. Vol. 32, p. 146.

15. K. N. Dikshit, Pre-Historic Civilization of the Indus Valley, 1935, pp. 135-37.

16. G. R. Hunter, Op. Cit., pp. 158-160.

17. P. Meriggi, 'Our Indus Schrift', Wiestschriftder Deutschen Morgendandischen Gesellschaft, Leipzig, 1934, p.12

18. Bankabehari Chakravarti, Op. Cit., p. 9.

19. Alan S, C. Ross, 'The Numeral-signs of the Mohenjodaro Script, Memoirs of the Archaeological Survey of India, No. 57.

20. Note Nos. 13, 14.

21. B. Chakravarti, Op. Cit., p. 10.

22. Bedrich Hrozny, Ancient History of Western Asia India and Crete, Tr. Procjaska, Prague, 1954: pp. 48-50,

23. Swami Sankarananda, The Rig Vedic Culture of Pre-Historic India, and The Indus People Speak, Varanasi, 1955, p. 48.

24. *B. M. Barua,, 'The Indus Script and the Tantric* Code, ' Indo-Iranica ', Vol. I: pp. 15-21.

25. Sir Mortimer Wheeler: The Indus Civilisation, CUP. Cambridge, 1968, pp. 107-130.

26. K. N. Sastri, New Light on the Indus Civilization, Delhi, 1957, P. 43.

27. B. B. Lal, 'Antiquity', Britain, March 19.6. p. 168.

28. Sudhangshu Kumar Roy, Indus Script-An Appeal to tne Orientalists, Calcutta, 1964, p. 42.

29. Bankabehari Chakravarti, Op, Cit., pp. 23-48.

30. Ibid., pp. 30, 35.

31. S. K. Golegaonkar, Mohenjodaro Lipi, Samaj and Sanskrirti, Poona, 1976, p. 32.

32. S. R. Rao, Lothal and the Indus Civilization, 1973, pp. 111-113.

33. Ibid., pp. 112-113.

34. Ibid., pp. 113-114.

35. Hindu, (Newspaper), 23-4-1979. p. 7.

36. Rev. H. Heras, Op. Cit,, pp. 23-75.

37. Rev. H Heras, "The Plastic Representation of God Amongst the Proto-Indians" in the Sardesai Commemoration Volume, Bombay, 1938; p. 223.

38. Rev. H. Heras, 'The Numerala of Mohenjodaro Script' in A Volume of Inuian and Iranian Studies, ed. E. Denison Ross, London, 1936, p.138.

38-a. *Rev. H. Heras, Studies in Proto-Indo Mediter*ranean Culture, Vol. I, pp 29-132.

39. Ibid, pp. 68-85.

40. Ibid., pp. 132-33,
41. S. K. Chatterji, Indo-Aryan and Hindi, Allahabad, 1943, p. 42.
42. Rev. H. Heras, Op, Cit., p. 135.
43. N. V. Gurov, 'Towards the Linguistic Interpretation of the Proto-Indian Texts' in the Journal of Tamil Studies, IATR, Madras, Vol. 2: No. 1, May 1970, pp. 70-71,
44. Ibid, pp. 73-74,
45. *Ibid.*, pp. 80-81
46. The Mail, (Newspaper), Madras 30-4-1980.
47. Asko Parpola, 'The Indus Script Decipherment-the Situation at the end of 1969' in the Journal of Tamil Studies, Vol. II, No. 1, pp. 133,
48. Steppo Kekenniemi, Asko Parpola and Simo Parpola, Materials *for the Study of the* Indus Script, Vol. I, A Concordance to the Inscriptions, Copenhagen, 1973.
49. Askoparpola, Op. Cit., p. 93.
50. Ibid.
51. Ibid., pp. 92-100
52. *Ibid., pp. 90-96.*
53. Ibid., p. 90, 95.
54. Asko Parpola, Further Progress in the Indus Script Decipherment, p. 35.
55. DED. 417
56. Ibid, 8.

57. Asko Parpola, Further Progress... p. 38.
58. புறம். 9; சிலப். 11:18-22.
59. Ibid,, p. 94. 99.
60. Ibid., p 100.
61, Ibid., p. 91.
62. Ibid., p. 104.
63. Ibid., p. 104.
64. Y. Konorozov, Proto - India, 1968. pp. 4-8.
65. Asko Parpola, Op. Cit. P. 97.
66. K. N. Dikshit, Pre-Historic Civilization of the Indus Valley, p. 12.
67. I. Mahadevan, Journal of Tamil Studies, Vol II. No. I. pp. 157-251
68 I. Mahadevan,, Study of the Indus Script through Bi-lingual Parallels in Ancient Cities of the Indus (ed.) Gregory. L. Possehl, Vikas, New Delhi, 1979; p. 262.
69. Ibid, p. 265.
70. I. Mahadevan, The Indus Script etc. p. 5.
71. Yazdani, Megalithic Remains of the Deccan-New Features, Journal of the Hyderabad Archaeological Society, 1917, pp. 56-79.
72. B. B. Lal, 'From theMegalithic to the Harappan: tracing back the graffiti on the Pottery' in Ancient India, 1960 No. 16: 4-24.
73. Ibid. pp 23-24.

நினைவுக்கு எட்டாதத் தொல்பழங்காலத்தில், தென்னகத்தில் இருந்து திராவிடரின் ஒரு கிளையினர் வடக்கு நோக்கிச் சென்றனர்; சிந்துவெளியில் மருதநில நாகரிகத்தைப் போற்றி வளர்த்தனர் என்பதைக் கண்டோம். அவர்களுள் ஒரு சாரார் நடுகிழக்கு நாடுகளில் குடியேறினர்; நடுநிலக் கடற்பகுதி வரையில் தங்கள் நாகரிகத்தைப் பரப்பினர். வெள்ளப் பெருக்கால் சிந்துவெளி நகரங்கள் சிதைந்த பொழுது, சிந்துவெளித் திராவிடர்களுள் ஒரு சாரார், தெற்கு நோக்கி வந்தனர். அவர்களைப் பிற்காலத்தில் 'வேளிர்' எனச்சுட்டினர். தங்களுடன் கறுப்பு-சிவப்பு மண்பாண்டப் பண்பாட்டையும் ஓவிய எழுத்து வடிவத்தையும் அவர்கள் கொண்டு வந்து இருத்தல் வேண்டும். இடையில் பல இடங்களில் தங்கித்தங்கி, இடம்பெயர்ந்து அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்த பொழுது, இரும்புக் காலப்பண்பாடு தழைத்தோங்கத் தொடங்கி இருக்கலாம் எனக் கொள்ளுவது பொருத்தமாகும். காண்க: தமிழ்நாட்டு வரலாறு - தொல்பழங்காலம், பக்கம் 127 128.

74. David W. Mc Alpin,

1. Dravidian and Elamite-a real break through, J.A.O.S., Vol. 93; No. 3: 384-5 (1974)

2. Toward Proto-Elamite Dravidian Language Vol. 50: No. 1: 89-101. (1974).

75. Ibid, Elamite and Dravidian Further Evidenece *of Relationship, Current Anthropology* Vol. 16: No. 1. 105-115 (1975).


LIST OF SIGNS
SEAL INSCRIPTIONS

LIST OF SIGNS




SEAL OF INSCRIPTIONS



## மணியக வெளியீடுகள்

1. வாழ்வும் இலக்கியமும் .... டாக்டர் க. த. திருநாவுக்கரசு
2. திருக்குறளும் இந்திய அறநூல்களும் .... ,,
3. அறிஞர் அறவாழி .... ,,
4. அடிமை விலங்கு ... ,,
5. சான்றோர் கண்ட திருவள்ளுவர் .... ,,
6. தமிழ் நிலவு .... ,,
7. சிந்துவெளி எழுத்து வடிவங்கள் ... ,,
8. பழந்தமிழ் மொழியியல் ... ,,
9. வாதாடாத வழக்குகள் .... தா. கணேஷ் பாபு, M.A., B.L.
10. Studies in Tamil and Greek Literature Dr. K. D. Thirunavukkarasu